மலர் 3 • இதழ் 1 • மே 2018 • ரூ.15/-

# யாதும்

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

3ம் ஆண்டு சிறப்பிதழ்



## கைகொடுக்கும் கல்வி உதவித்தொகை!

## சூப்பர் வாய்ப்பு தரும் சுற்றுலா படிப்புகள்!


ஒரு வேளை
மிஸ் பண்ணினாலும்...
மீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !
I FOOD
சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...
SAKTHI
SAMBAR POWDER
KULAMBU CHILLI POWDER
சக்தி ®
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com
Refined Sunflower Oil
CUT MANGO PICKLE
• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial | App Store | Google play

Email: entranceexam2016@sathyabamauniversity.ac.in | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

# கல்வியைப் பரிசளிப்போம்!

*அனைவருக்கும் அன்பு வணக்கம்.*

'பன்னிரண்டாம் வகுப்பில் எடுக்கிற மதிப்பெண்கள்தான் ஒரு மாணவரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்' என்று பொதுவாகச் சொல்வார்கள். ஆனால், அகரம் அறக்கட்டளையின் அனுபவம் வேறுவிதமாக இருக்கிறது. 'பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எடுக்கிற மதிப்பெண்கள் மட்டுமே இப்படித் தீர்மானிப்பதில்லை. ஏழை மாணவர்களின் கல்விநலனில் அக்கறை காட்டும் அன்புநிறைந்த மனிதர்களின் பங்களிப்பே அந்த மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது' என்பதுதான் அகரத்தின் அனுபவம்.

ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் வந்துவிட்டால், அகரம் அறக்கட்டளையின் அலுவலகம் மாணவர்களால் நிரம்பிவழியும். காலில் செருப்பு அணியக்கூட வசதியில்லாத சூழலில் வரும் மாணவர்களின் முகத்தில் ஒரு மென்சோகம் இருக்கும். பன்னிரண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று, உயர்கல்வி படிக்க விண்ணப்பம் வாங்கவே வசதியற்ற நிலையில் உள்ள அந்த மாணவர்களால், அதிக மதிப்பெண்கள் பெற்றமைக்காக மகிழ்ச்சி அடையக்கூட முடியாது. 'கல்லூரிக்குள் நுழைந்து கல்வியைத் தொடரமுடியுமா?' என்கிற ஏக்கமும் கவலையும் அவர்களை ஓர் இருளைப் போல கவ்வியிருக்கும். ஏழை மாணவர்களின் கல்விநலனில் அக்கறைகொண்ட மனிதர்களின் அன்பினால், அந்த மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒரு வெளிச்சத்தைத் தர இயலும்.



அரசுப் பள்ளி மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்புவரை படிப்பதற்கே பல தடைகளைக் கடந்து வரவேண்டி இருக்கிறது. சாலை வசதிகள் இல்லாத, போக்குவரத்து வசதிகள் இல்லாத, மூன்றுவேளை உணவு என்கிற அடிப்படைத் தேவைகூட நிறைவேறாத ஏழை மாணவர்களே அரசுப் பள்ளிகளில் கல்வி கற்கிறார்கள். இலவசமாகக் கிடைக்கும் மதிய உணவுக்காகவே பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமிருக்கும் நாட்டில், நான்கு கல்லூரிகளில் விண்ணப்பம் போடவே ஆயிரக்கணக்கில் பணம் தேவைப்படுகிற உயர்கல்வி பலருக்கு எட்டாக்கனியாகவே இருக்கிறது.

பணம் ஒரு பக்கம் தடை என்றால், தங்கள் ஊருக்கு அருகிலுள்ள சிறுநகரங்களுக்குச் செல்வதே பெரிய விஷயமாக இருக்கும் இந்தக் குடும்பங்களுக்கு, மாநகரங்களில் பிரமாண்டமாக எழுந்து நிற்கும் கல்லூரிகளையோ, பல்கலைக்கழங்களையோ தேடிச்சென்று கல்வி கற்கும் விழிப்பு உணர்வோ வாய்ப்போ இல்லாமல் இருப்பது மிகப்பெரிய

தடை என்று சொல்லலாம். அதிலும் மாணவிகளின் நிலை இன்னும் சிக்கலானது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கிற அளவுக்கு மதிப்பெண்களை கடுமையாக உழைத்துப் பெற்ற மாணவியை, ‘வெளியூரில் பெண் தங்கிப் படிப்பது பாதுகாப்பில்லை’ என்று காரணம் கூறி, வீட்டுக்கு அருகில் இருக்கும் கல்லூரியில் சேர்த்துவிடுவார்கள். வீட்டுக்கு அருகிலுள்ள கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவிகளுக்கு, கல்லூரி செல்லும் வாய்ப்பு மறுக்கப்படும். இவையெல்லாம் கற்பனைகள் அல்ல. ஒவ்வொரு ஆண்டும் அகரம் சந்திக்கும் கள அனுபவங்கள்.

அர்ப்பணிப்பு மிக்க அகரம் தன்னார்வலர்கள் எடுக்கும் முயற்சிகள், ஏழை மாணவர்கள் தங்களின் தடைகளைக் கடந்து கல்வியைத் தொடர துணைநிற்கின்றன. வறுமையில் மூழ்கித் தத்தளிக்கிற மாணவர்களுக்கு அன்பும் அக்கறையும் நிறைந்த உதவிக்கரங்கள் கிடைக்கிறபோது, பற்றிக்கொண்டு பத்திரமாகக் கரைசேர்கிறார்கள் அவர்கள்.



பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவரும் நேரம் இது. நல்ல மதிப்பெண் எடுக்கும் பல மாணவர்கள், குறித்த தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்ற விவரம்கூட தெரியாமல் இருப்பார்கள். உரிய காலத்தில் விண்ணப்பம் போட்டால் மட்டுமே, திறமைக்கேற்ற கல்லூரிகளில் இடம் கிடைக்கும். கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள், தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள அரசுப் பள்ளிகளுக்குச் சென்று, வழிகாட்டலும் பொருளாதார உதவியும் தேவைப்படுகிற மாணவர்களுக்குத் தங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்தால், ஏழை மாணவர்களின் வாழ்வில் அது திருப்புமுனையை ஏற்படுத்தும்.

அக்கறையுள்ளவர்கள், மாணவர்களின் கல்விக்கு உதவுகிற வழிமுறைகளை அறிந்துகொள்ள விரும்பினால், அகரம் அறக்கட்டளையைத் தொடர்புகொள்ளலாம். நாம் எடுக்கிற சின்னச்சின்ன முயற்சிகள்கூட ஒரு மாணவரின் வாழ்வில் வசந்தத்தைக் கொண்டுவரும். கல்வியைவிட சிறந்த செல்வம் இருக்க முடியாது. அந்த செல்வத்தைப் பரிசளிப்பதைப் போல சிறந்த அறம் வேறு கிடையாது. அனைவரும் இணைந்து கல்வி எனும் சமூக வளர்ச்சிக்கான அறப்பணியில் அக்கறை காட்டுவோம்.

அன்புடன்,

**சூர்யா.**


# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 3 • இதழ் 1

மே 2018

கௌரவ ஆசிரியர்

**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# உள்ளூர் சூழலியலைக் கற்றுத் தருகிறோம்!



பாடப்புத்தகங்களில் படிக்கும் சூழலியல் கல்வியைவிடவும், நேரடியாகக் களத்தில் சென்று கற்றுக்கொள்ளும் சூழலியல் அறிவே குழந்தைகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தும். இதைத்தான் பல சூழலியல் செயல்பாட்டாளர்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். காடு குறித்தோ, மரங்கள் குறித்தோ, புத்தகங்களில் படித்து படங்களாகவும் எழுத்துகளாகவும் மனதில் ஏற்றிக்கொள்ளலாம். ஆனால், அதைவிடவும் முக்கியம், களத்துக்கே அழைத்துச் சென்று அவர்களுக்கு சொல்லித்தருவது. இதுவே சூழலியல் மீது அவர்களுக்குப் பற்றை ஏற்படுத்தும்; அதைக் காக்கும் கடமையையும் உணர்த்தும்.

இதை உணர்ந்த பல செயல்பாட்டாளர்கள் ‘சூழலியல் கல்வி’யை தங்களுடைய செயல்பாட்டின் ஒரு பகுதியாகவே வைத்திருக்கிறார்கள். புதுச்சேரியை அடுத்துள்ள சர்வதேச கிராமமான ஆரோவில்லில் செயல்படும் சுற்றுச்சூழல் கல்வி மையத்தில் பணியாற்றும் சத்தியமூர்த்தி, குழந்தைகளிடம் சூழலியல் கல்வியை எடுத்துச் செல்லும் இப்படிப்பட்ட ஒருவராக இருக்கிறார்.

‘‘விழுப்புரம் மாவட்டம் இடையன்சாவடி என்கிற கிராமம் என்னுடையது. அப்பா விவசாயி. அம்மா, நாட்டு வைத்தியர். ஆசிரியர் பணிக்கான டிப்ளமோ படிப்பை முடித்துவிட்டு இருந்தபோது, புதுச்சேரி ஆரோவில்லில் உள்ள பொட்டானிகல் கார்டனில் எனக்குப் பணி கிடைத்தது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாகவும் மகளிர் சுயஉதவிக் குழு நிர்வாகம் தொடர்பாகவும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி கொடுத்து, பின்பு பணியில் அமர்த்தினார்கள். 2007ம் ஆண்டு ஆரோவில்லில் சுற்றுச்சூழல் கல்வி மையத்தை ஏற்படுத்தினார்கள். குழந்தைகளுக்கும் மகளிர் சுய உதவிக்குழுக்களில் இருக்கும் பெண்களுக்கும் சூழலியல் கல்வியைத் தருவதே இந்த மையத்தின் நோக்கம். இதில் சுற்றுச்சூழல் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தேன்.

விவசாய குடும்பப் பின்னணியிலிருந்து வந்ததாலும், அம்மா பாரம்பரிய மருத்துவராக இருந்த காரணத்தினாலும் செடிகள், கொடிகள், மூலிகைகள், மரங்கள் குறித்த அறிவு எனக்கு இயல்பாகவே இருந்தது. இதுவே வேலையாகவும் அமைந்துவிட்டதால், இன்னும் இந்தத் துறை சார்ந்து ஆழமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது. எங்கே எந்த மரத்தை நட வேண்டும், எந்த மரத்தை அழகுக்காக உருவாக்கும் தோட்டங்களில் பயன்படுத்தலாம், பூ மரங்கள் எவை எவை என அரசு வனத்துறை மூலமாகவும் தொண்டு நிறுவனங்களிடமும் கற்றுக்கொண்டேன்’’ என்று தன்னைப் பற்றிய அறிமுகத்தைத் தருகிற சத்தியமூர்த்தி, சூழலியல் கல்வியில் என்னவெல்லாம் சொல்லித் தரப்படுகிறது என்பதை விளக்கினார்.

‘‘விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும் புதுச்சேரி மாநிலத்திலும் இருக்கும் சுமார் நூறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சூழலியல் கல்வி சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக உள்ளூர் சூழலியலை சொல்லித் தருகிறோம்.





## சூழல் ஆர்வலர்கள்

## சத்தியமூர்த்தி

தூத்துக்குடி முதல் விசாகப்பட்டினம் வரையிலான கடற்கரைப் பகுதியை கோரமண்டல் கடற்கரை என்கிறோம். இந்த முழு பகுதியிலும் ஒரே விதமான சூழலியலைக் காண முடியும். வெப்பநிலை, தாவரங்கள், புள்ளினங்கள், நீரில் உள்ள தனிமங்கள், மண்ணின் தன்மை, உணவுப் பழக்கங்கள் என ஒரே மாதிரியான எகோ சிஸ்டம் இங்கே உள்ளது. மண்ணின் மரங்கள் எவை, வெளியிலிருந்து இறக்குமதியான மரங்கள் எவை என மாணவர்களுக்கு பாடம் எடுக்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வந்த மரங்களை அடையாளம் காணவும் சொல்லித்தருகிறோம்.

உள்ளூர் சுற்றுச்சூழலை மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இது வெறுமனே உரையாடலாக நிகழும் பாடமல்ல! மாணவர்களை இந்த சூழலோடு 'வாழ வைத்து' கற்றுக்கொள்ள வைக்கிறோம். ஐந்து நாட்கள் முகாமில் குழந்தைகள் கலந்துகொள்கிறார்கள் எனில், அந்த ஐந்து நாட்களையும் குப்பை போடாமல் வாழ்வது எப்படி என அவர்களை வாழ்ந்து பார்க்க வைக்கிறோம். குழந்தைகளுக்கு தாம் ஒரு நாளில் எவ்வளவு குப்பைகளை உருவாக்குகிறோம் என்பது தெரிவதில்லை.

'முகாமில் உள்ளவர்களுக்கு குப்பையில்லா நொறுக்குத்தீனிகளைத் தயாரிக்க வேண்டும்' என ஒரு மாணவரிடம் சொல்வோம். பிஸ்கெட்டோ, சிப்ஸோ கடையில் வாங்கினால் நிச்சயம் குப்பை சேரும். குப்பையில்லாமல் என்ன ஸ்நாக்ஸ் கிடைக்கும்? கொய்யாப்பழமும், நிலக்கடலையும் குப்பையில்லா, மக்கும் குப்பையைக் கொண்ட உணவுப்பொருட்கள்தானே? இவற்றை வாங்கி உண்ணலாம் அல்லவா?! இதைத்தான் முகாம்களில் கற்றுத்தருகிறோம். அதுபோல ஒரு பகுதியிலிருந்து சூழ்நிலை மாறுபட்ட மற்றொரு இடத்துக்கு சைக்கிள் பயணங்கள் போவதன் மூலமாக இரண்டு பகுதியின் சூழ்நிலையையும் ஒப்பிட்டுக் கற்றுக்கொள்ள வைக்கிறோம்'' என்கிற சத்தியமூர்த்தி, புதுச்சேரியைச் சுற்றியுள்ள பள்ளி மாணவர்களுக்கு இந்த விஷயங்களை ஆரோவில் பொட்டானிக்கல் கார்டன் நிர்வாகத்தினர் கட்டணம் இல்லாமல் செய்வதாகச் சொல்கிறார். வெளியிலிருந்து இதுபோன்ற கேம்ப் அமைத்து மாணவர்களுக்கு சூழலியல் கல்வியைக் கற்றுத்தர குறைந்தபட்ச கட்டணத்தைப் பெறுவதாகவும் சொல்கிறார்.

தன்னைப் போன்றவர்கள் சொல்வதைப் புரிந்துகொண்டு, தாங்கள் கேட்கிற வசதியை செய்துதருவதால் ஆரோவில் சூழலியல் செயல்பாடுகளுக்கு உகந்த இடமாக உள்ளதாகவும் இவர் குறிப்பிடுகிறார். சூழலியல் கல்வியோடு மரங்கள் நடுவது, இயற்கை வளங்களைக் குறைவாகப் பயன்படுத்துதல், குப்பைகளைக் குறைப்பது போன்றவற்றையும் இவர்கள் பிரசார இயக்கமாக முன்னெடுக்கிறார்கள்.

சரி... சூழலியல் கல்வி மாணவர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

''ஒருமுறை சூழலியல் வகுப்புக்கு வந்து செல்கிற மாணவர்களின் நடவடிக்கையே மாறிவிடுகிறது. வாழ்வின் அடுத்தடுத்த கட்டங்களுக்குப் போகும்போது இவர்கள் தாங்கள் கற்ற சூழலியல் அறிவைப் பயன்படுத்துகிறார்கள். சிறுவயதில் முகாமில் கலந்துகொண்ட மாணவர்கள், கல்லூரிக்குச் செல்லும்போது அங்கே சூழலியல் சார்ந்த விஷயங்களை செய்து அசத்துகிறார்கள். ஏதோ ஒரு கல்லூரியிலிருந்து சூழலியல் சார்ந்த விழாவுக்கு அழைப்பு வரும், போய்ப்பார்த்தால் அங்கே நமது முகாமில் பயின்ற மாணவர்கள் அந்த விஷயத்தை முன்னெடுத்திருப்பார்கள். அதனால்தான் மாணவர்களுக்கு சூழலியல் கல்வி சொல்லித்தருவதை முக்கியத்துவம் கொடுத்துச் செய்கிறோம்'' என்கிறார் சத்தியமூர்த்தி.

– மு.வி.நந்தினி

# கைகொடுக்கும் கல்வி உதவித்தொகை!



நல்ல மதிப்பெண் பெற்று பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற ஏழை மாணவர்கள், உயர்கல்வி படிப்பதற்கு உதவிக்கரம் நீட்ட அன்பானவர்கள் இங்கே ஏராளம் பேர் உண்டு. இது தவிரவும் மத்திய, மாநில அரசுகள் ஒரு பக்கம்... அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இன்னொரு பக்கம்... என கல்வி உதவித்தொகையை அள்ளி வழங்குகின்றன. இவற்றில் சில ஸ்காலர்ஷிப்கள் பற்றிய தகவல் இங்கே...

## முதல் தலைமுறைக்கு

எஞ்சினியரிங், கால்நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம் என கவுன்சிலிங் மூலம் அட்மிஷன் பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை தமிழக அரசே வழங்கி வருகிறது. ஜாதி, வருமானம் என எதையும் கணக்கில் எடுக்காமல் இந்த உதவித் தொகை வழங்கப்படும். எஞ்சினியரிங் கல்லூரிகளில் நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேரும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகை உண்டு. தங்கள் குடும்பத்தில் பட்ட தாரிகளே இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் சான்றிதழ் பெற்று கவுன்சிலிங் விண்ணப்பத்துடன் இணைத்து அளிக்க வேண்டும்.

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு

உயர்கல்வி படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குகிறது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்குள் இருக்கவேண்டும். மாணவர்கள் தாங்கள் படிக்கும் கல்வி நிறுவனத்தின் மூலம், அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

## மாற்றுத் திறனாளிகளின் வாரிசுகளுக்கு

தமிழக அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, மாற்றுத் திறனாளிகளின் வாரிசுகளுக்கு உயர்கல்வி படிக்க உதவித்தொகை வழங்குகிறது. வீட்டிலிருந்தபடியே கலை மற்றும் அறிவியல் படிப்பவர்களுக்கு 1,500 ரூபாயும், ஹாஸ்டலில் தங்கிப் படித்தால் 1,750 ரூபாயும் வழங்கப்படும். எஞ்சினியரிங் போன்ற தொழிற்கல்விகளை வீட்டிலிருந்தே படித்தால், 2,000 ரூபாயும், ஹாஸ்டலில் தங்கிப் படித்தால் 4,000 ரூபாயும் வழங்கப்படும்.

விவரங்களுக்கு: www.scd.tn.gov.in/schemes/children_assistance.php

## சிறுபான்மை மாணவர்களுக்கு

பிளஸ் 1 முதல் அனைத்து பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புகளும் பயிலும் சிறுபான்மை சமூக மாணவர்களுக்கு சிறுபான்மையினர் நலத்துறை 'போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப்' திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்குகிறது. இறுதித் தேர்வில் 50 சதவீதத்துக்குக் குறையாத மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு மேல் இது வழங்கப்படமாட்டாது. இந்த உதவி பெறும் மாணவர்கள், வேறு திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற முடியாது. இதற்கு www.scholarships.gov.in என்ற மத்திய அரசின் இணையதளத்தில் ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். ஒவ்வோர் ஆண்டும் விண்ணப்பிக்கும் மாணவர்களில் மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் சேர்பவர்களுக்கு இது உதவியாக இருக்கும். கல்விக்கட்டணத்தோடு மாதாந்திர பராமரிப்புத் தொகையும் வழங்கப்படும்.

விவரங்களுக்கு: www.minorityaffairs.gov.in/SCHEMES/PERFORMANCE/Scholarship-Schemes/post-matric-scholarship-scheme

## மாற்றுத் திறனாளிகளுக்கு

மத்திய சமூக நீதி அமைச்சகம் மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குகிறது. தொழில் படிப்புகளைப் படிக்கும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கு இது வழங்கப்படுகிறது. 40 சதவிகிதத்துக்கும் மேல் உடல் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளே இதைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள். ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு மேல் இது வழங்கப்படமாட்டாது. இந்த உதவி பெறும் மாணவர்கள், வேறு திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற முடியாது. அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உள்ள கல்விக் கட்டணம் மாணவர்களுக்கு வழங்கப்படும். இத்துடன் மாதாந்திர பராமரிப்புத் தொகை, புத்தகங்கள் மற்றும் ஸ்டேஷனரி செலவுகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படும். குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது விதி.

விபரங்களுக்கு: scholarships.gov.in/public/schemeGuidelines/DptofEmpPersonwithDisabilities-Guidelines-Pre&_Post-matric_scholarlship.pdf

## இன்ஸ்பையர் உதவித்தொகை

பிளஸ் 2வில் கணிதம் மற்றும் அறிவியல் பிரிவுகளில் முதல் ஒரு சதவீதத்தைப் பிடிக்கும் மாணவர்களுக்கு இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை வழங்கும் உதவித்தொகை இது. ஆண்டுக்கு 10 ஆயிரம் பேருக்கு இந்த ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது. உதாரணத்துக்கு தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வு எழுதி தேறியவர்களில், அதிக மதிப்பெண் பெற்ற ஒரு சதவிகிதம் பேருக்கு இது கிடைக்கும். அதாவது, சுமார் 3 லட்சம் பேர் தேறினால், அதில் அதிக மதிப்பெண் எடுத்த சுமார் 3,000 பேருக்கு இந்த உதவித் தொகை கிடைக்கும். அடிப்படை அறிவியல் துறைகளான கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் பிரிவுகளில் பி.எஸ்.சி மற்றும் ஒருங்கிணைந்த முதுகலை படிப்பில் சேரும் மாணவர்களுக்கு இது வழங்கப்படும். (எஞ்சினியரிங் மாணவர்கள் இதைப் பெற முடியாது!) வருடத்துக்கு 80 ஆயிரம் ரூபாய் வீதம் 3 முதல் 5 ஆண்டுகளுக்கு கிடைக்கும். ஜே.இ.இ மற்றும் நீட் தேர்வுகளில் முதல் 10 ஆயிரம் ரேங்குகளுக்குள் பெறுபவர்களும் இந்த உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.



விவரங்களுக்கு: www.inspire-dst.gov.in/scholarship.html

## கே.வி.பி.ஒய் உதவித் தொகை

மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை வழங்கும் கிஷோர் விக்யானிக் ப்ரோட்ஸகான் யோஜனா என்ற உதவித்தொகை இது. பிளஸ் 2 தேர்ச்சி பெற்று, அடிப்படை அறிவியல் துறைகளான இயற்பியல், வேதியியல், கணிதவியல், தாவரவியல், விலங்கியல் சார்ந்த பி.எஸ்சி. படிப்புகள் சேர்பவர்களில் 10 ஆயிரம் பேருக்கும், பி.இ மற்றும் பி.டெக் சேர்பவர்களில் 10 ஆயிரம் பேருக்கும், மருத்துவம் சேர்பவர்களில் 10 ஆயிரம் பேருக்கும் இது கிடைக்கும். ஆண்டுக்கு ரூ.48 ஆயிரம் முதல் ரூ.84 ஆயிரம் வரை உதவித்தொகை தரப்படும். பொதுத் திறனாய்வுத் தேர்வுமூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இதற்கு விண்ணப்பம் செய்ய, பிளஸ் 2 தேர்வில் எஸ்.சி/எஸ்.டி பிரிவினர் 70 சதவிகித மதிப்பெண்களும், மற்றவர்கள் 80 சதவிகித மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும்.

விவரங்களுக்கு: www.kvpy.iisc.ernet.in/main/index.htm

## இந்தியன் ஆயில் அகாடெமிக் ஸ்காலர்ஷிப்

இந்தியன் ஆயில் நிறுவனம் வழங்கும் இந்த உதவித்தொகை, பிளஸ் 2 தேர்ச்சி பெற்று பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு மட்டும் கிடைக்கும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.1 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். அனைத்துப் பிரிவினரும் பெறலாம். பொறியியல் மாணவர்கள் 300 பேருக்கும், மருத்துவ மாணவர்கள் 200 பேருக்கும் இது வழங்கப்படுகின்றது. மாதம் ரூ.3 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: www.iocl.com/Aboutus/Scholarships.aspx

## என்டிபிசி உதவித் தொகை

நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்



வழங்கும் உதவித் தொகை இது. பிளஸ் 2 தேர்ச்சி பெற்று பொறியியல் படிப்பில் சேரும் எஸ்.சி, எஸ்.டி, மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் ஆயிரம் பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும். கல்லூரியில் படிக்கும் காலத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

விபரங்களுக்கு: www.ntpc.co.in

### விவசாயத் திறமை உதவித்தொகை

'இந்தியன் கவுன்சில் ஆஃப் அக்ரிக்கல்சர் ரிசர்ச் நேஷனல் டேலன்ட் ஸ்காலர்ஷிப்' என்ற பெயரில் இந்திய வேளாண் கல்வி மையம் வழங்கும் உதவித் தொகை இது. இந்திய வேளாண் கல்வி மையம் (ஐசிஏஆர்) நடத்தும் நுழைவுத்தேர்வில் தேர்ச்சி பெற்று பி.எஸ்.சி, பி.டெக், பி.எப்.எஸ்.சி, போன்ற படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு வழங்கப்படும். சொந்த மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்திற்குச் சென்று படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இது கிடைக்கும். மேற்கண்ட விதிகளின்படி தேர்ச்சி பெறும் அனைவருக்குமே இது கிடைக்கும். கல்விக் காலம் முழுக்க மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

விவரங்களுக்கு: https://icar.org.in/

இவை தவிர இன்னும் ஏராளமான உதவித்தொகைகள் காத்திருக்கின்றன. இவை பற்றி கூடுதல் விவரங்களைத் தரும் மத்திய அரசு இணையதளம்: https://scholarships.gov.in/#

இதில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், மாநில அரசுகள், மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள் வழங்கும் உதவித்தொகைகள் பற்றிய விவரங்கள் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன.

இதேபோல தமிழக அரசும் https://tnvelaivaaippu.gov.in/scholarships.html என்ற இணையதளத்தை நடத்துகிறது. உயர்கல்வி வாய்ப்புகளைத் தொடுவதற்கு உதவித்தொகையைத் தேடும் அனைவருக்கும் வழிகாட்டும் நண்பனாக இது இருக்கிறது. ●




# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION யாதும் நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| பெயர் | | | |
|---|---|---|---|
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

**டிக் செய்யவும்**

☐ **ஓர் ஆண்டு ரூ.150**

☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.300**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம்.
YADHUM என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும்.
பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக்/ டி.டி.யுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55 ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை– 600 033. போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com




MHRD, Govt. of India, has ranked

# VIT as the best private engineering institution

in the country.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வி.ஐ.டியை நாட்டின் தலை சிறந்த தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

In a ranking done for the first time ever by the NIRF (National Institutional Ranking Framework) of MHRD, VIT has been ranked 13th overall and 1st among private institutions under 'Engineering institutions' category.

VIT has also been ranked 17th overall and 7th among private institutions under 'Management institutions' category.

## LEADING IN RESEARCH

**in number of publications**

**By publishing 2233 research articles in Scopus indexed journals in 2015, VIT has surpassed all the other institutions in India**

[Source: Scopus database as on 6.4.2016]

***We thank all our faculty, staff, students, alumni and well-wishers !!***

VIT® UNIVERSITY
(Estd. u/s 3 of UGC Act 1956)

VELLORE ▪ CHENNAI

www.vit.ac.in

VIT - A place to learn; A chance to grow

# நமது பள்ளி

**கலை பயிற்சிப்பட்டறை:** அகரம் அறக்கட்டளையின் நமது பள்ளி திட்டம் செயல்படும் பள்ளி மாணவர்களுக்கு மாதம்தோறும் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை எஸ்.ஆர்.எம் கல்லூரியில் நடைபெறும். அந்த வகையில் ஏப்ரல் 7–ம் தேதி கலை பயிற்சிப்பட்டறை எஸ்.ஆர்.எம் கல்லூரியில் நடைபெற்றது. கருங்குழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் மறைமலை நகர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தனித்திறமைகளை வெளிக்கொண்டுவரும் விதத்தில் இப்பயிற்சிப்பட்டறை நிகழ்ந்தது. மாணவர்கள் ஆடல், பாடல், நடிப்பு மூலம் தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தினர். பிறகு பொம்மலாட்டம் மூலம் மாணவர்களின் பின்னூட்டம் பெறப்பட்டது.

**மாணவர்களுடன் நேர்காணல்:** நமது பள்ளி திட்டம் செயல்படும் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களின் கல்வி ஆர்வத்தையும், அவர்களின் பிற திறமைகளையும் அறிந்துகொள்வதற்காக ஆண்டுதோறும் நேர்காணல் நடத்தப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு முதற்கட்டமாக ஏப்ரல் 10–ம் தேதி மறைமலை நகர் தொடக்கப்பள்ளியில் பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு நேர்காணல் நடைபெற்றது. இது இவர்களுக்கு முதன்முறை நடத்தப்படும் நேர்காணல்.

ஏற்கனவே மறைமலை நகர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு இந்தக் கல்வியாண்டின் தொடக்கத்தில் நேர்காணல் நடத்தப்பட்டது. இப்போது கல்வியாண்டின் இறுதியில் இரண்டாவது கட்டமாக ஏப்ரல் 16 மற்றும் ஏப்ரல் 18 தேதிகளில் நேர்காணல் நடத்தப்பட்டு, அவர்களின் முன்னேற்றம் கணக்கிடப்பட்டது.

**கோடை முகாம்:** கருங்குழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஏப்ரல் 26 முதல் 30–ம் தேதிவரை கோடை முகாம் நடத்தப்பட்டது. முகாமில் மாணவர்கள் சமூகத்தைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் தங்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்டனர். மாணவர்கள் நூலகம், தபால் நிலையம், பேரூராட்சி அலுவலகம், வங்கி போன்ற இடங்களுக்கு நேரில் சென்று, அங்கு நடைபெறும் செயல்பாடுகளை அறிந்துகொண்டனர். இந்த அலுவலகங்கள் தரும் சேவைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டனர். மேலும் மரம் நடுதல், கூட்டாஞ்சோறு ஆக்குதல், காகிதக் கலை, பறவைகளை காணுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளுடன் முகாம் சிறப்பாக நடந்து முடிந்தது.





# நிகழ்வுகள்

## முன்னாள் மாணவர்கள் சந்திப்பு!



மாணவர்களின் கல்விப்பயணத்தோடு மட்டும் அகரம் அறக்கட்டளையின் உறவு நின்றுவிடுவதில்லை. கல்வியை முடித்து பணிக்குச் சென்றபிறகும் அவர்களோடு அகரம் தொடர்பில் உள்ளது. அந்த முன்னாள் மாணவர்களின் வாழ்க்கைத் தேவைகள் மற்றும் முன்னேற்றங்களில் அகரம் அறக்கட்டளை அக்கறை காட்டிவருகிறது. இதற்காக 'அகரம் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு' நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடைபெறுகின்றன.

ஏப்ரல் 8-ம் தேதி, சென்னை தி.நகரில் ஜி.என். செட்டி சாலையில் உள்ள 'நாம் அறக்கட்டளை' வளாகத்தில், அகரம் முன்னாள் மாணவர்களின் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் அமர்வில் பொருளாதார நிபுணர் திரு. வ.நாகப்பன் அவர்கள் உரையாற்றினார். கல்லூரிக் கல்வியை முடித்து பணியில் சேர்ந்திருக்கும் அகரம் முன்னாள் மாணவர்களுக்கு சேமிப்பு மற்றும் முதலீடு குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்தும்விதமாக இந்த அமர்வு அமைந்தது. தேவையற்ற செலவுகளைக் குறைத்துக்கொண்டு சிக்கனமாக வாழும்விதம் பற்றிய ஒரு பார்வை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. பண மேலாண்மை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை நம் முன்னாள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார் திரு. வ.நாகப்பன். இந்த அமர்வு, நம் முன்னாள் மாணவர்களுக்கு தங்கள் சேமிப்பையும், முதலீட்டு சமநிலைகளையும் தக்கவைத்துக் கொள்ள உதவியாக இருந்தது.

அடுத்த அமர்வு, தங்கள் வாழ்வின் சமூக அம்சங்களைப் புரிந்துகொள்ள நம் முன்னாள் மாணவர்களுக்கு உதவும்விதமாக அமைந்தது. வாழ்வில் சந்திக்கும் பிரச்னைகள் பற்றியும், எப்படி சிந்தித்து அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது பற்றியும் வழக்கறிஞர் திருமதி. அருள்மொழி அவர்கள் உரையாற்றினார். மேலும், திரு.விஜயகுமார் மற்றும் திரு.கஜேந்திரன் ஆகியோர், தாங்கள் சந்தித்த பிரச்னைகளை எப்படி எதிர்கொண்டு மீண்டு வந்தார்கள் என்பதை வாழ்வியல் உதாரணங்களோடு விளக்கினர்.

இறுதியாக 'நாம் அறக்கட்டளை'யின் நிறுவனர் திருமதி. சுகாசினி நம் முன்னாள் மாணவர்களிடம் உரையாடி, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்' என்ற நாம் அறக்கட்டளையின் நோக்கங்கள் பற்றி அறிமுகம் தந்தார். •





பிளஸ் 2-வுக்குப் பிறகு...

# சூப்பர் வாய்ப்பு தரும் சுற்றுலா படிப்புகள்!

மருத்துவம், பொறியியல் ஆகிய இரண்டு படிப்புகள் மட்டுமே உடனடி பணி வாய்ப்பைத் தரும் என்பது கல்வி உலகத்தில் நீண்ட காலமாக நிலவும் மூட நம்பிக்கைகளில் ஒன்று. ஆனால், இவை இரண்டைவிடவும் அதிகமான சம்பளத்தையும் பணிவாய்ப்பையும் தரும் துறைகள் கண்ணுக்குத் தெரியாமல் மறைவாக உள்ளன. நமக்குத் தேடல் மட்டுமே தேவை.

அந்த வகையில் சுற்றுலா தொடர்பான படிப்புகள், உலகமே ஒரு கிராமமாகிவிட்ட சூழலில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இணையத் தொடர்பின் வளர்ச்சியால், சுற்றுலா சார்ந்து உலகம் முழுக்கக் கிடைக்கும் பணிவாய்ப்புகளும் பெருகி வருகின்றன.

பல தனியார் கல்லூரிகள் சுற்றுலா தொடர்பான படிப்புகளை வழங்குகின்றன. ஆனால், அரசு கல்விக்கூடங்களில் படிக்கும் படிப்புகளுக்கே பன்னாட்டு சுற்றுலா நிறுவனங்கள் முக்கியத்துவம் தருகின்றன. படித்து முடித்தவுடன் பணி என்பது அரசு கல்வி நிலையங்களில் படித்தால் மட்டுமே சாத்தியம் என்பதை மாணவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### எங்கே படிக்கலாம்?

இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டூரிஸம் அண்ட் மேனேஜ்மென்ட் (INDIAN INSTITUTE OF TOURISM AND TRAVEL MANAGEMENT) பி.பி.ஏ மற்றும் எம்.பி.ஏ டூரிஸம் மேனேஜ்மென்ட் படிப்புகளை வழங்குகிறது. இந்தியாவில் குவாலியர், புவனேஸ்வர், நொய்டா, கோவா, நெல்லூர் ஆகிய இடங்களில் இந்தக் கல்வி மையம் இயங்குகிறது. ஆந்திராவில் உள்ள நெல்லூரில் தென்னகத்துக்கான கல்வி மையம் அமைந்துள்ளது.



■ கல்வியாளர் நெடுஞ்செழியன்





பி.பி.ஏ (டூரிஸம் – டிராவல்) மூன்றாண்டு படிப்புக்கான விண்ணங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மே 15 வரை நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மூலம் சேர்க்கை நடைபெறும். எழுத்துத் தேர்வு ஜூன் முதல் வாரத்தில் நடத்தப்படுகிறது. பிளஸ் 2 தேர்வு எழுதியவர்கள் விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்சம் 45 % மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே நுழைவுத் தேர்வு எழுத முடியும்.

முழுப் படிப்புக்கும் ஆகும் கட்டணச் செலவு ரூ.2 லட்சத்து 45 ஆயிரம். செமஸ்டருக்கு முன்னதாக அந்த செமஸ்டருக்குரிய தொகையை செலுத்திவிடவேண்டும்.

இந்தத் தேர்வில் சேர்க்கைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் குவாலியர், புவனேஸ்வர், நொய்டா, கோவா, நெல்லூரில் உள்ள கல்வி மையங்களில் படிக்கலாம்.

## இந்த படிப்பில் என்னென்ன சொல்லித்தருவார்கள்?

சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்வது என்பதே இந்தப் படிப்பு. அவர்களுடைய தங்குமிடம், என்ன மாதிரியான இடங்களுக்கு அவர்கள் செல்ல விரும்புகிறார்கள், அவர்களுடைய பட்ஜெட் என்ன, பட்ஜெட்டுக்கு ஏற்ற தங்குமிடம், சுற்றுலா இடங்களைத் தேர்வு செய்வது, சுற்றுலா செல்வதற்கு வாகனங்களை ஏற்பாடு செய்வது, உணவு தொடர்பான ஏற்பாடுகள் என ஒவ்வொன்றையும் திட்டமிட்டு செய்து தருவதை இந்தப் படிப்பு சொல்லித்தரும்.

## பணி வாய்ப்புகள்

சுற்றுலா என்பது பிரபலமான இடங்களைச் சுற்றிப் பார்ப்பது என்பது மட்டுமல்ல. ஆன்மிகச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, பிசினஸ் சுற்றுலா, வெளிநாடுகளில் நடைபெறும் சொகுசுத் திருமணங்களை ஏற்பாடு செய்து தருவது என இந்தத் துறை சார்ந்து ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன. வீட்டிலிருந்தே அனைத்தையும் செய்துகொடுக்கும் குறு நிறுவனத்தை ஆரம்பித்தும் பொருளீட்டும் வாய்ப்பு உள்ளது. பன்னாட்டு சுற்றுலா நிறுவனங்களில் பணியாற்றலாம். பல்வேறு சினிமா படப்பிடிப்பு ஏற்பாடுகளை செய்துகொடுக்கும் லொகேஷன் கன்சல்டன்ட் பணியும் இப்போது பிரபலமடைந்து வருகிறது. அட்வெஞ்சர் டூரிஸம் விரும்பிகளை அட்வெஞ்சர் தொடர்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வது, வரலாறு தொடர்பான இடங்களுக்கு பிரத்யேகச் சுற்றுலா என பணிவாய்ப்புகள் சுற்றுலாத் துறையில் அதிகமாகவே உள்ளன.

## எம்.பி.ஏ படிப்புகள்!

சுற்றுலாத் துறையில் பட்ட மேற்படிப்பை குவாலியரில் உள்ள மத்திய சுற்றுலா கல்வி மையம் வழங்குகிறது. எம்.பி.ஏ டூரிஸம் – டிராவல், எம்.பி.ஏ இன்டர்நேஷனல் டூரிஸம், எம்.பி.ஏ டூரிஸம் சர்வீசஸ் ஆகிய படிப்புகள் சொல்லித் தரப்படுகின்றன.

எம்.பி.ஏ டூரிஸம் – டிராவல் இரண்டாண்டு படிப்பு. 'வேகமாக வளர்ச்சியடைந்து வரும் சுற்றுலா மற்றும் பயணத் துறையில் உயர்தரமான கல்வியை வழங்க உருவாக்கப்பட்டதே இந்தப் படிப்பு' என்கிறது இந்தக் கல்வி மையம்.

சர்வதேச சுற்றுலாவில் தனித்துவமிக்க கல்வியைச் சொல்லித்தருவதே எம்.பி.ஏ இன்டர்நேஷனல் டூரிஸம். இந்தப் பாடத்தின் ஒரு பகுதியாக ஏதாவது ஒரு சர்வதேச மொழி கற்றுத் தரப்படுகிறது. படிக்கும்போதே, பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

சுற்றுலா தொடர்பான சேவைகளை அளிப்பது பற்றிய படிப்பு டூரிஸம் சர்வீசஸ். ஒளிப்படம் எடுப்பது போன்ற சேவைப் படிப்புகள் இதில் அடங்கும்.

நெல்லூரில் உள்ள கல்வி மையம், எம்.பி.ஏ டூரிஸம் மற்றும் டிராவல் மேனேஜ்மென்ட் படிப்பை வழங்குகிறது. சுற்றுலாவும் சரக்கு மேலாண்மையும் இணைந்த படிப்பு இது. பிரத்யேகமாக இந்தக் கல்வி மையத்தில் மட்டுமே இந்தப் படிப்பு சொல்லித் தரப்படுகிறது.

பி.பி.ஏ மற்றும் எம்.பி.ஏ படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள், படிப்பு விவரம், கட்டண விவரம் ஆகியவற்றைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள, கீழ்க்கண்ட இணைய இணைப்பில் சென்று பாருங்கள்.

http://www.iittm.ac.in/ ●





# இனிப்பாக சொல்லித் தரலாம் கணக்கு!

■ **விஜயபாஸ்கர் விஜய்**

ஒரு கணித ஆசிரியர் அவ்வப்போது இயற்பியல், வேதியியல் மற்றும் தமிழ் ஆசிரியராகவும் மாறினால், அப்படியான ஆசிரியரை மாணவர்கள் கொண்டாடுவார்கள். ஆரம்பப் பள்ளியில் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள் Mensuration படிக்கும்போது திரும்பத் திரும்ப 100 சென்டிமீட்டர் = 1 மீட்டர் என்று படிப்பார்கள்.

ஒரு அடி ஸ்கேலில் 1,2,3,4,5,6... என்று 30 சென்டிமீட்டர் வரை இருக்கும். இப்படி நூறு செ.மீ இருந்தால் அதுதான் ஒரு மீட்டர்.




படத்தில் உள்ளது போல, முதலில் ஒரு மீட்டரை போர்டில் வரைந்து காட்ட வேண்டும். அதற்கடுத்து ஒரு மீட்டர் சதுரத்தை போர்டில் வரைந்து காட்ட வேண்டும். அதற்கடுத்து ஒரு மீட்டர் கனசதுரத்தை போர்டில் வரைந்து காட்ட வேண்டும்.

போர்டில் பார்க்கும் பாடத்தை செயல்வழியில் எப்படி அறிவது? உங்கள் கையில் ஒரு மீட்டர் டேப் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் வகுப்பின் முதல் பெஞ்சுக்கும் கடைசி பெஞ்சுக்கும் இடையே உள்ள தூரத்தை எப்படி அளப்பீர்கள்? அந்த டேப்பை வைத்து மீட்டர் மீட்டராக அளப்பீர்கள்தானே. டேப்பின் இரு முனைகளையும் இரண்டு பேர் பிடித்துக்கொள்ள, நீளமாக அந்த டேப்பைப் பிடித்து மீட்டர் மீட்டராக அளப்பீர்கள். அதுதான் மீட்டர்.

சரி... இந்த வகுப்பின் தரையின் பரப்பளவை எப்படி அளப்பீர்கள்? அதை வெறுமனே மீட்டர் மீட்டராக அளக்க முடியாது. ஆனால் சதுரம் சதுரமாக அளக்க முடியும். சுவரின் ஓரமாக டேப்பை வைத்து முதலில் நீளத்தை அளந்துகொள்வீர்கள்; அடுத்து அகலத்தையும் இப்படி அளந்துகொள்வீர்கள். வகுப்பறையின் நீளம் எட்டு மீட்டர், அகலம் எட்டு மீட்டர் என்றால், அந்த வகுப்பறை 64 சதுர மீட்டர் பரப்பு கொண்டது. அதாவது, ஒரு மீட்டர் நீளமும் ஒரு மீட்டர் அகலமும் கொண்ட 64 சதுரங்கள் இந்தத் தரையில் இருக்கிறது என்று பொருள். இதுதான் பரப்பளவு. அதாவது, $m^2$.

இந்த வகுப்பறையின் கனத்தை, அதாவது Volume எனப்படும் கொள்ளளவை எப்படி அளப்பீர்கள்? அதை மீட்டராகவும் அளக்க முடியாது; சதுர மீட்டராகவும் அளக்க முடியாது. ஆனால் கன மீட்டராக அளக்க முடியும். நீங்கள் ஏற்கனவே அளந்த அளவுகளோடு, கூடுதலாக வகுப்பறையின் உயரத்தையும் கணக்கிட வேண்டும். அதாவது, ஒரு மீட்டர் நீளமும், ஒரு மீட்டர் அகலமும், ஒரு மீட்டர் உயரமும் கொண்ட எத்தனை பெட்டிகளை அடுக்கினால், வகுப்பறை நிறையும் என்று கணக்கிடுங்கள். அதுதான் கொள்ளளவு.

எனவே,

1. நீளத்தை மீட்டராக நீள் கோட்டின் மூலம் அளக்கலாம்.

2. பரப்பளவை சதுர மீட்டராக சதுரங்கள் மூலம் அளக்கலாம்.

3. கனத்தை கனமீட்டராக பெட்டி பெட்டியாக அளக்கலாம்.

இந்த நீள்கோடு, சதுரம், பெட்டி ஆகிய மூன்றும் இயற்பியலில் (Physics) வருகிறது.

எங்கே தெரியுமா?

1. நீள்கோட்டை நொடி என்ற நேர அளவீட்டால்


வகுத்தால், அங்கே திசைவேகம் (Velocity) வருகிறது. m/s. எத்தனை மீட்டர் தூரத்தை எத்தனை நொடிகளில் கடக்கிறோம் என்பதுதான் திசைவேகம் என்ற Velocity.

பத்து மீட்டர் தூரத்தை இரண்டு நொடிகளில் கடந்தால், 10/2 = 5 m/s. பத்து மீட்டர் தூரத்தை ஐந்து நொடிகளில் கடந்தால் 10/5 = 2 m/s. இதில் 5 > 2. அப்படியானால் பத்து மீட்டர் தூரத்தை இரண்டே நொடிகளில் கடப்பதற்கு அதிக வேகத்தில் செல்ல வேண்டும்.

2. ஒரு பொருளின் எடை கொடுக்கும் விசையை (force) பரப்பளவால் வகுத்தால், அங்கே அழுத்தம் Pressure கணக்கிடப்படுகிறது. குறிப்பிட்ட சதுர மீட்டர் பரப்பளவில் 100 கிலோகிராம் ஏன் 10 கிலோகிராமைவிட அதிக Pressure கொடுக்கிறது என்றால், குறிப்பிட்ட பரப்பளவில் 100 கிலோகிராம் ஏற்படுத்தும் Force பத்து கிலோகிராம் ஏற்படுத்தும் Force–ஐவிட அதிகமானது. இதைத்தான் $Kgf/m^2$ என்று சொல்கிறோம். நீங்கள் தண்ணீர் செல்வதற்காகப் பதிக்கப்படும் குழாய்களின் மேல்பக்கம் பாத்தால், அங்கே 6 $Kgf/cm^2$ என எழுதியிருக்கும். ஒரு செ.மீ சதுரம் என்பது எவ்வளவு சிறியது. அதில் 6 கிலோகிராம் எடையை வைத்தால் எவ்வளவு அழுத்தமாக இருக்கும்! அவ்வளவு அழுத்தம்வரை அந்தக் குழாய் தாங்குமாம். அதைத்தான் 6 $Kgf/cm^2$ என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

உங்கள் உள்ளங்கையை விரித்துப் பாருங்கள். அதில் ஒரு சதுரம் தெரிகிறதா? அதை அளந்து பாருங்கள். 5 செ.மீ நீளம், 5 செ.மீ அகலம் இருக்கிறதா? அப்படியானால் உங்கள் உள்ளங்கையின் பரப்பளவு 25 சதுர செ.மீ. அதாவது, ஒரு செ.மீ நீளமும், ஒரு செ.மீ அகலமும் கொண்ட 25 சதுரங்களை உங்கள் உள்ளங்கையில் வைக்கலாம்.

சரி, உங்கள் கணக்கு புத்தகத்தின் எடை எவ்வளவு இருக்கும். 200 கிராம் இருக்குமா? அதை உள்ளங்கையில் வைத்தால், அதன் Pressure உங்களால் உணர முடிகிறதா? அதாவது, இந்த 200 கிராம் எடை கொடுக்கிற




விசையை, உள்ளங்கையில் இருக்கும் 25 சதுர சென்டிமீட்டர் பரப்பும் பகிர்ந்துகொள்கிறது. இதை வகுத்தால், 200 கிராம் / 25 = 8. ஒரு சதுர சென்டிமீட்டர் பரப்பில் 8 கிராம் எடை எவ்வளவு விசையைக் கொடுக்கிறதோ, அவ்வளவு அழுத்தம் அங்கே கூடுகிறது.

இப்போது ஒரு புத்தகத்தின்மீது இன்னொரு புத்தகம் வைத்தால் என்னவாகிறது? எடை 400 கிராம் ஆகிறது. இதை 25 சதுர சென்டிமீட்டர் பரப்புக்குப் பிரித்தால், 400 கிராம் / 25 = 16. ஒரு சதுர சென்டிமீட்டர் பரப்பில் 16 கிராம் எடை கொடுக்கிற விசை, நம் உள்ளங்கையில் அழுத்துகிறது. அதனால்தான் ஒரு புத்தகத்தின்மீது இன்னொரு புத்தகம் வைத்தால் கையில் அழுத்தமாக உணர்கிறோம்.

3. கனமீட்டர் அளவை எடையைக் கொண்டு வகுத்தால், அதுதான் அடர்த்தி (Density). அதை இப்படிச் சொல்லலாம்.

ஒரு மீட்டர் நீளம், அகலம், உயரம் கொண்ட ஒரு பெட்டியில் தண்ணீர் ஊற்றுங்கள். அந்தத் தண்ணீரை எடை போட்டுப் பார்த்தால், சுமார் 1,000 கிலோ இருக்கும். அதே பெட்டியில் பெட்ரோலை ஊற்றி எடை போட்டுப் பார்த்தால், அது 730 கிலோ இருக்கும். ஒரே அளவுள்ள பெட்டிதான். அதில் ஊற்றி எடுத்த ஒரே அளவான தண்ணீர் ஏன் பெட்ரோலைவிட அடர்த்தியாக இருக்கிறது? ஏனெனில், தண்ணீரின் அடர்த்தி (Density), பெட்ரோலைவிட அதிகம். அதுதான் அதன் அளவு $Kg/m^3$. அதாவது, ஒரு மீட்டர் கனசதுரம் அளவுள்ள பொருளுக்கு எவ்வளவு எடை என்ற அளவு.

இதை மாணவர்களிடம் ஐந்து நிமிடங்களில் விளக்கிவிடலாம். ‘புரிந்தவரைக்கும் புரியட்டும், புரியாவிட்டால் ஒன்றும் பிரச்னையில்லை’ என்ற அளவில் அறிமுகப்படுத்தும் நோக்கில் சொன்னால்கூட போதும்.

‘கணிதத்துக்கு, இந்த உலகில் உள்ள எல்லாவற்றுடனும் தொடர்பு இருக்கிறது’ என்ற செய்தியை மாணவர்களுக்கு இதன் மூலம் உணர்த்தலாம். அதேநேரத்தில் இயற்பியல் பற்றிய ஓர் உள் ஒளியையும் அவர்கள் மனதில் ஒளிர வைக்கிறோம் என்பது இதன் சிறப்பு. ●

AGARAM
FOUNDATION
அறம் செய விரும்பு


# கிணறு வெட்டிய எஞ்சினியர்

அகரம் அறக்கட்டளையின் கல்விப்பணிகளில் ஓர் அங்கமாக, 2010-ம் ஆண்டு தொடங்கப்பட்டது 'விதை திட்டம்'. தகுதியுள்ள மாணவர்களுக்கும், அவர்களின் உயர்கல்விக்கு உதவும் நன்கொடையாளர்களுக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு, இம்மாணவர்கள் வெற்றிகரமாக கல்வி பெற அகரம் அறக்கட்டளை உதவுகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 1,961 மாணவர்களின் பட்டப்படிப்புக் கனவுகளை நிறைவேற்றியுள்ளது இந்தத் திட்டம். வெறும் மதிப்பெண்களை மட்டுமே அளவுகோலாக எடுக்காமல், மாணவர்களின் கல்விச்சூழலையும் வாழ்க்கைச்சூழலையும் பார்த்து சமூகநீதி அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். விதை திட்டத்தில் முக்கியமான பணி, இல்ல நேர்காணல். இந்தத் திட்டத்தில் பங்கேற்றுப் படிக்க விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகளின் வீடுகளுக்குச் சென்று கள ஆய்வு செய்யும் பணி இது. அகரம் தன்னார்வலர்கள் இதை அர்ப்பணிப்போடு செய்கிறார்கள். இப்படிச் சென்ற தன்னார்வலர்கள் எழுதித் தந்த அனுபவப் பதிவுகளிலிருந்து ஒன்று:

சில ஆசிரியர்கள் தங்கள் முயற்சியால் மாணவர்களின் வாழ்வையே மாற்றும் வழியைக் காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சம்பவம் இது.

2010ம் ஆண்டு, மே மாதம். அகரம் பவுண்டேஷனின் இறுதிக்கட்ட மாணவர் சேர்க்கைக்கு ஹவுஸ் விசிட்டிங் நடந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் சென்னையிலிருந்து செயலாளர் ஜெயஸ்ரீ பேசினார். சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியிலிருந்து வரதராஜன் என்ற ஓய்வுபெற்ற அரசுப்பள்ளி ஆசிரியர் எழுதிய கடிதம் பற்றி அவர் குறிப்பிட்டார்.

'மணிவிழுந்தான் என்ற ஊரிலுள்ள என் தோட்டத்துக்குப் பக்கத்தில் கலையரசன் என்ற பையன் இருக்கிறான். தாயை இழந்த அந்த மாணவன், விவசாயக் கூலி வேலைக்குச் சென்றுகொண்டே படித்து வருகிறான். வீரகனூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் இலவசமாகப் படிக்க நான் ஏற்பாடு செய்து கொடுத்தேன். அங்கு படித்து பிளஸ் 2வில் 1100 மதிப்பெண் எடுத்துள்ள கலையரசனின் உயர்கல்விக்கு



உதவி செய்யுங்கள்' என்று அகரத்துக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது ஆசிரியர் வரதராஜனின் கடிதம்.

அந்த கிராமத்தில் இருந்த மூன்று பகுதிகளிலும் விசாரித்து, நீண்ட தேடலுக்குப் பிறகு கலையரசனின் வீட்டைக் கண்டுபிடித்தோம். மணிவிழுந்தான் கிராமத்தில் மாரியம்மன் கோயிலின் பின் பக்கம் நான்கு வீடுகள் இருந்தன. அதில் நான்காவதாக இருந்த வீடுதான் கலையரசனின் வீடு.

அதை வீடு என்று சொல்ல முடியாது. நான்கு சுவர்கள், மேலே பத்து குச்சிகள் குறுக்கும் நெடுக்குமாக போடப்பட்டிருந்தன. அதன்மீது நாற்பது பனை ஓலைகளைப் பரப்பி கயிறு போட்டுக் கட்டியிருந்தனர். அந்த ஓலைகளும் நைந்து போயிருந்தன. வீட்டுக்கு வெளியில் ஓர் அடுப்பும், பழைய கயிற்றுக்கட்டில் ஒன்றும் இருந்தன. யூரியா கொண்டுவரும் சாக்குப் பைகளைக் கிழித்து ஒரு கதவு போல செய்து, வாசலில் மாட்டியிருந்தனர். நாய், பூனை எதுவும் வீட்டுக்குள் போகாமல் இருக்கத்தான் அந்தக் கதவு என்பது புரிந்தது.

கதவைத் திறந்து உள்ளே போய்ப் பார்த்தேன். பகலில்கூட படுத்துத் தூங்க முடியாதபடி சூரிய வெளிச்சம் வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தது. போதையில் வரும் கலையரசனின் அப்பா வீட்டுக்கு வெளியிலேயே படுத்துக்கொள்வார், மழை வந்தால் பக்கத்தில் இருக்கும் மாரியம்மன் கோயிலுக்குப் படுக்கப் போய்விடுவார் என்று சொன்னார்கள்.

கலையரசன் எங்கே என்று கேட்டபோது, அவர் அப்பாவுடன் கிணறு வெட்டும் வேலைக்குச் சென்றுள்ளதாகச் சொன்னார்கள். கலையரசனைப் பார்க்கவேண்டும் என்று சொன்னதும், இரண்டு சிறுவர்கள் தங்களின் கால்களையும் கைகளையும் மோட்டார் சைக்கிளாக பாவித்துக்கொண்டு 'டர்... டர்...' என்ற சத்தத்துடன் கலையரசனைத் தேடிச் சென்றனர்.

அருகில் இருந்தவர்களிடம் விசாரித்தேன். கலையரசனின் அம்மா பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே இறந்து விட்டதாகச் சொன்னார்கள். அதன்பிறகு கலையரசனின் அப்பா முழு நேரமும் குடித்துவிட்டு பொறுப்பில்லாமல் திரிகிறார். பக்கத்திலேயே கலையரசனின் சித்தி வீடு உள்ளது. கலையரசனும், அவரது தம்பியும் எப்போது போனாலும் சித்தி வீட்டில் சாப்பாடு போட்டுவிடுகிறார்கள். மற்றபடி துணிமணிகள், பள்ளி புத்தகங்கள், ஃபீஸ் எல்லாவற்றுக்கும் கலையரசன்தான் காட்டு வேலைக்கும், கிணறு வெட்டும் வேலைக்கும் போய் சம்பாதிக்கிறார். அதை வைத்து தானும் படித்துக்கொண்டு, தன் தம்பியையும் படிக்க வைப்பதாகச் சொன்னார்கள்.

கலையரசனின் மேல் படிப்புக்கு உதவி செய்வதற்காக நாங்கள் வந்துள்ள செய்தி தெரிந்து சுற்றுப்பகுதியில் இருந்த பலரும் வந்தனர். கலையரசன் கிணறு வெட்டும் வேலைக்குப் போன இடத்தில் கருங்கல் சரிந்து விழுந்ததில் கையில் அடிபட்டுக்கொண்டதாக, அவர்களில் ஒருவர் சொன்னார். அதனால் கலையரசன் வேலை செய்யமுடியாமல், பக்கத்து தென்னந்தோப்பில் படுத்துள்ளதாகவும் சொன்னார்.

கிணறு வெட்டுமிடத்தில் யாருமில்லை என்று திரும்பி வந்த சிறுவர்கள் இருவரும், மீண்டும் தங்கள் கற்பனை மோட்டார் சைக்கிளை ஓட்டியபடி தென்னந்தோப்புக்குப் போனார்கள். பத்து நிமிடங்களில், இடது கையில் கட்டுடன் கலையரசன் வந்தார். கையிலும் மனதிலும் இருந்த வலியால், எங்களைப் பார்த்தும் கண் கலங்கினார்.

''மேற்கொண்டு படிக்க என்ன ஏற்பாடு செய்துள்ளாய்?'' என்று கேட்டேன். வரதராஜன் ஆசிரியர் மூலம் எஞ்சினியரிங் படிப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாகச் சொன்னார்.

''உனக்கு என்ன படிக்கவேண்டும் என்ற விருப்பம் உள்ளது?'' என்று கேட்டேன்.

''என்ன படிக்கவேண்டும், எங்கே படிக்கவேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது, நான் படித்து நல்ல வேலைக்குப் போகவேண்டும். என் தம்பியையும், என்னைப் போல இருக்கும் வசதியில்லாத ஏழைப் பிள்ளைகளையும் படிக்க வைக்க என்னால் முடிந்த உதவிகளைச் செய்யணும். இதுதான் அக்கா என்னுடைய ஆசை...'' என்றார் கலையரசன்.

என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோதே, தன்னுடைய இயலாமையையும், குடும்ப வறுமையையும் நினைத்து வெட்கப்பட்ட அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. அவருடைய கடுமையான முயற்சியும், பொறுப்புணர்வையும் நினைத்து என் கண்களிலும் கண்ணீர் வந்தது.

அவரது பள்ளி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ் நகல்களை வாங்கிக்கொண்டு திரும்பினேன். உடனே ஹவுஸ் விசிட்டிங் படிவத்தை நிரப்பி அகரம் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தேன்.

தகுதி அடிப்படையில் கலையரசன் தேர்வு செய்யப்பட்டார். சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் சிவில் எஞ்சினியரிங் படித்து முடித்த கலையரசன், வேலை கிடைத்ததும் தன் தம்பியையும் சென்னைக்கு அழைத்துச் சென்று நல்லபடியாகப் படிக்கவைத்து விட்டார். இயற்கையின் சதியால் பெற்றோரை இழந்தும், மது அரக்கனால் பெற்றோர்கள் இருந்தும் பயனில்லாமல் ஆகியும், கலையரசனைப் போல இன்னும் பலர் தமிழகமெங்கும் வாழ்கின்றனர். விதை போன்ற திட்டங்கள்தான் அவர்களின் வாழ்க்கையை மாற்ற வேண்டும்.

**– ஜெயந்தி சிவசுப்ரமணியன்**




# மன்னர் குடும்பமே அரசுப் பள்ளியில் படிக்கும் நாடு

‘உலகின் டாப் 10 கல்விமுறைகள்’ என பட்டியல் எடுத்தால், அதில் ஐரோப்பிய நாடான நெதர்லாந்துக்கு முக்கிய இடம் உண்டு. ‘கல்வியின் நோக்கம் இளைய தலைமுறையை செழுமைப்படுத்துவதே’ என்பதை உணர்ந்திருக்கும் நாடு அது. ‘விளையாட்டும் உடற்பயிற்சியும்தான் குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஆதாரம். வீட்டுக்குப் போனதும் நன்கு விளையாடி, போதுமான உடற்பயிற்சிகள் செய்து, நிம்மதியாகத் தூங்கிவிட்டு வரும் குழந்தைதான் வகுப்பில் பாடங்களை நன்றாக கவனிக்கிறது’ என ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இதை உணர்ந்திருப்பதால், நெதர்லாந்தில் 10 வயதுக்கு முன்பாகக் குழந்தைகளுக்கு ஹோம் ஒர்க் தருவதில்லை. ஹோம் ஒர்க் என்பது அவர்களின் விளையாட்டு நேரத்தைத் திருடிக்கொள்ளும் என்பதை உணர்ந்த கல்விமுறை அது.

நெதர்லாந்தில் தனியார் பள்ளிகளைப் பார்ப்பது அரிது. அந்த நாட்டின் மன்னர் குடும்பத்து வாரிசுகளே அரசுப் பள்ளிகளில்தான் படிக்கிறார்கள். நெதர்லாந்தில் பள்ளிகளுக்கு அரசே செலவு செய்கிறது. மூன்று விதமான பள்ளிகள் அங்கு உள்ளன. பொதுப்பள்ளிகளை உள்ளாட்சி அமைப்புகள் நிர்வாகம் செய்கின்றன. மதரீதியான அமைப்புகள் நடத்தும் சிறப்புப் பள்ளிகள் இரண்டாவது வகை. குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த கல்வி அமைப்பு நடத்தும் இந்தப் பள்ளிகளுக்கும் அரசே நிதியுதவி செய்கிறது. மூன்றாவது வகை, எல்லா மதத்தினருக்குமான சிறப்புப் பள்ளிகள். இவற்றுக்கும் அரசே நிதியுதவி செய்கிறது. பெற்றோர்கள் விரும்பினால் பள்ளிக்கு நன்கொடை தரலாம். அது பள்ளியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படும்.

நெதர்லாந்தில் குழந்தைகளை நான்கு வயதில் பள்ளியில் சேர்க்கிறார்கள். ஐந்து வயது முதல் 15 வயது வரை கட்டாயக் கல்வி. 16 வயது முதல் 18 வயது வரை வாரத்தில் இரண்டு நாட்களாவது படிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. 18 வயதில்தான் கட்டாயக்கல்வி நிறைவு பெறுகிறது. 15 வயதுவரை அரசே கல்விச்செலவைப் பார்த்துக்கொள்வதால், கல்விக்கட்டணம் எதுவும் கட்டத் தேவையில்லை. 16 வயதிலிருந்தே பெற்றோர்களுக்கு கல்விச்செலவு ஆரம்பிக்கிறது. அதுவும்கூட மிகக்குறைந்த கட்டணம்தான். வருவாய் குறைவாக இருக்கும் குடும்பங்கள், இதற்குக்கூட அரசிடம் விண்ணப்பித்து நிதியுதவி பெறலாம். நியாயமாக இருக்கும்பட்சத்தில் உடனே உதவி கிடைக்கிறது.

மதரீதியான கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி உண்டு என்பதால், நெதர்லாந்தில் கத்தோலிக்க பள்ளி, யூதர் பள்ளி, இஸ்லாமியர் பள்ளி என எல்லாமே உண்டு. பல்கலைக்கழகங்களும் உள்ளன. ஆனால், எல்லாவற்றையுமே அரசின் கல்வித்துறை கண்காணிக்கிறது. கல்வித்தரம் சரியில்லை என்றால், எந்த நேரமும் இழுத்து மூடிவிடுவார்கள்.

நான்கு வயது முதல் 12 வயதுவரை ஆரம்பக்கல்வி. ஐந்து வயதாகும்வரை பள்ளிக்கு தினமும் வர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பள்ளிச்சூழல் பழகும்வரை எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் வீட்டில் இருக்கலாம்.

காலை 8.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை மட்டுமே பள்ளிகள். வாரத்தில் ஒருநாள் புதன்கிழமை அரை நாள் மட்டுமே பள்ளி.

ஆரம்பக்கல்வி எட்டு ஆண்டுகள். அங்கே எழுதவும், படிக்கவும், கணக்கு போடவும் கற்றுக்கொள்வார்கள். அதன்பின் உயர்நிலைக் கல்விக்குச் செல்லவேண்டும். ஆரம்பக்கல்வியை முடித்ததும் ஒரு தேர்வு எழுதியும் உயர்நிலைக் கல்விக்குச் செல்லலாம்; அல்லது ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர் சேர்ந்து எடுக்கும் முடிவின் அடிப்படையிலும் உயர்நிலைக் கல்விக்குச் செல்லலாம். உயர்நிலைக் கல்வியில் என்ன படிக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவே இந்த முடிவு தேவைப்படுகிறது.

உயர்நிலையில் மூன்றுவகையான பிரிவுகள் உள்ளன. HAVO (senior general secondary education), VWO (pre-university education), VMBO (preparatory secondary vocational education) ஆகியவையே அவை. நம் ஊரில் இருப்பதுபோல, தொடக்கப் பள்ளிகளுக்கு அடுத்து நடுநிலைப்பள்ளி என்ற ஒன்று அங்கு கிடையாது. தொடக்கப்பள்ளியில் ஜாலியாக இருந்துவிட்டு, திடீரென ஒரு நாளில் உயர்நிலைப் பள்ளிக்கு வந்துவிடுகிறார்கள்.



ஒரே நாளில் அவர்களுக்கு பொறுப்பு, அக்கறை, பணிவு, ஒழுக்கம் என எல்லாமே வந்துவிடாது அல்லவா? அதனால், முதல் ஓராண்டுக்கு 'பிரிட்ஜ் கோர்ஸ்' என்ற பெயரில் அவர்கள் எல்லோரும் உயர்நிலைக் கல்விக்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள். அதன்பிறகே அவர்கள் பிரிக்கப்படுகிறார்கள்.

இவற்றில் VMBO சற்றே ஜாலியானது. 'நான் எதிர்காலத்தில் கல்லூரிக்கோ, பல்கலைக்கழகத்துக்கோ போகப் போவதில்லை' என தீர்மானமாக முடிவு செய்பவர்களுக்கான படிப்பு இது. நம் ஊரில் பிளஸ் 1 போகும்போது ஆரம்பிக்கும் வொகேஷனல் கோர்ஸுக்கு ஈடானது. படிக்கும்போதே ஏதேனும் ஒரு தொழில் கற்றுக்கொண்டு, படித்துமுடித்ததும் வேலைக்குப் போய்விடலாம்; அல்லது சொந்தத் தொழில் செய்யலாம்.

மற்ற இரண்டில், HAVO கொஞ்சம் ஈஸியாக இருக்கும். இது ஐந்தாண்டுகள் படிக்கவேண்டிய படிப்பு. முடித்ததும் ஏதேனும் கல்லூரியில் சேரலாம். VWO கடுமையான உழைப்பைக் கோரும் படிப்பு. ஆறாண்டுகள் படிக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவற்றில் சேர்ந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் கற்பது, மருத்துவம் படிப்பது போன்றவற்றுக்கு இதுவே அடிப்படை.

12 வயதில் ஒரு குழந்தையோ, அதன் பெற்றோரோ, ஆசிரியரோ, 'இந்தக் குழந்தைக்கு இதுதான் சரிப்படும்' என்பதை எப்படித் தீர்மானிக்க முடியும்? அதனால்தான் இதை மிகக் கடுமையான விதியாக வைக்கவில்லை. எந்தப் படிப்பிலும் சில ஆண்டுகள் படித்துவிட்டு, அதன்பிறகு 'இது சரிப்படாது' என வேறொரு பாடத்திட்டத்துக்கு மாறிக்கொள்ளலாம்.

உயர்நிலைக் கல்வியை முடித்ததும், எல்லோரும் டிப்ளமோ பெற்றுக்கொண்டு வெளியில் வருகிறார்கள். அதன்பின் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்குப் போக வேண்டும். நெதர்லாந்தில் இரண்டு வகையான பல்கலைக்கழகங்கள் உள்ளன. உயர் அறிவியல் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள். HAVO முடித்தவர்கள், முதல்வகைப் பல்கலைக்கழகங்களில் சேரமுடியும். கலை, அறிவியல், ஆசிரியர் பயிற்சி மற்றும் விவசாயம் போன்றவை இங்கே கற்றுத் தரப்படும். VWO முடித்தவர்கள் இரண்டாம் வகைக் கல்வி நிறுவனங்களுக்குப் போகலாம். இங்கே தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் உண்டு.

நெதர்லாந்தின் பாடத் திட்டத்தில் அறிவியலுக்கும் கணிதத்துக்கும் முக்கியமான இடம் உண்டு. அதனால்தான் அங்கு படிப்பவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் மிகக்குறைவாக இருக்கும் நாடுகளில் நெதர்லாந்தும் ஒன்று.

இன்னொரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் நெதர்லாந்து குழந்தைகளுக்குக் கட்டாயமாக இருக்கிறது. ஆரம்பப் பள்ளியிலேயே குழந்தைகள் டச்சு மொழியோடு ஆங்கிலமும் சேர்த்துப் படிக்கின்றன. சில பள்ளிகள் இருமொழிப் பள்ளிகளாகவும் இயங்குகின்றன. அதாவது, ஒரு சில பாடங்கள் டச்சு மொழியிலும், வேறுசில பாடங்கள் ஆங்கிலத்திலும் கற்றுத் தரப்படுகின்றன. இன்னும் சில பள்ளிகள் மூன்றாவதாக இன்னொரு மொழியையும் கற்றுத் தருகின்றன. அதனால், சர்வதேச அரங்கிலும் இவர்கள் மதிப்பு பெறுகிறார்கள். •



# உயிர்பெறும் உன்னத மரம்!

தெலங்கானா மாநிலத்தின் மெகபூப்நகர் மாவட்டத்தில் இருக்கும் பில்லாலமாரி கிராமம், உலகப்புகழ் பெற்றது. காரணம், ஓர் ஆலமரம். சுமார் 700 ஆண்டுகள் பழமையான இந்த ஆலமரம், சுமார் மூன்று ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிளை பரப்பி வளர்ந்துள்ளது. உலகின் இரண்டாவது பெரிய ஆலமரம் என்ற பெருமை இதற்கு உண்டு.

ஆனால், கடந்த சில மாதங்களாக பூச்சிகளின் தாக்குதல் இந்த மரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக சாகடித்து வந்தது. மூன்று மாதங்களுக்குமுன்பு, பூச்சிகளோடு போராட முடியாமல், ஒரு பெரிய கிளை உடைந்து விழுந்தது.

இதைத் தொடர்ந்து இந்த வளாகத்துக்குள் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடைவிதித்த மாவட்ட நிர்வாகம், மரத்தைக் காப்பாற்ற முயற்சிகளை எடுத்துவருகிறது. கிளைகளின் அடிப்புறத்தில் தூண்களைக் கட்டி, அவற்றில் கிளைகள் தாங்கி நிற்குமாறு செய்துள்ளார்கள்.

வனத்துறையும் களத்தில் இறங்கி புதுமையாக சிந்தித்தது. உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் நோயாளிக்கு, சலைன் திரவம் ஏற்றுவார்களே, அதுபோல இந்த ஆலமரத்துக்கும் சிகிச்சை கொடுத்தார்கள். குளோர்பைரிபாஸ் என்ற பூச்சிக்கொல்லி மருந்தைத் தண்ணீர் கலந்து சலைன் பாட்டிலில் ஊற்றி, அதை இஞ்செக்‌ஷன் வழியாக ஆலமரத்தின் வேருக்குச் செலுத்தினார்கள்.

ஆனால், மூன்று ஏக்கர் பரப்பில் இருக்கும் பிரமாண்ட மரத்தின் வேருக்கு மட்டும் பூச்சிக்கொல்லி ஏற்றுவது போதுமானதாக இருக்கவில்லை. அதனால் கிளைகளிலும் ஆங்காங்கே கட்டி பூச்சிக்கொல்லியை மரத்துக்குச் செலுத்த ஆரம்பித்தார்கள்.

பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் இந்தப் படங்கள் வெளியானதும், பலரும் இந்த மரத்துக்காகப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்கள்.

பல நாள் முயற்சிக்கு இப்போது பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளது. ஆமாம், இந்த மரத்தில் இப்போது புதிய இலைகள் துளிர்விட ஆரம்பித்துள்ளன. ‘‘இன்னும் கொஞ்ச நாளில் சுற்றுலாப் பயணிகள் இந்த மரத்தைப் பழைய ஜீவனோடு பார்க்கமுடியும்’’ என நம்பிக்கையோடு சொல்கிறது மெகபூப்நகர் மாவட்ட நிர்வாகம். ●

# விதை செயல்பாடுகள்

## மாணவர்கள் நேர்காணல்



ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல் வாரத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அகரம் விதை திட்டத்துக்கான நேர்காணல் துவங்கும். இந்த ஆண்டு விதை திட்டத்தில் நேர்காணல் ஏப்ரல் 7 மற்றும் 8–ம் தேதிகளில் தொடங்கியது. இந்த ஆண்டு பிளஸ் 2 தேர்வு எழுதி முடித்து, அகரம் விதை திட்டத்தின்மூலம் உயர்கல்வி படிக்கும் வாய்ப்பு கேட்டு விண்ணப்பித்திருக்கும் மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் நடைபெறும் 1–1 நேர்காணல் இது. மாணவர்களின் கல்வி ஆர்வம், எந்தப் படிப்பு படிக்க விரும்புகிறார்கள், அவர்களின் கல்வியில் குடும்பத்தினர் காட்டும் அக்கறை போன்ற விஷயங்களை உரையாடல்கள்மூலம் அகரம் தன்னார்வலர்கள் கண்டறிவார்கள்.

இதில் முதல் கட்டமாக திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலிருந்து சுமார் 250 மாணவர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் சுமார் 150 மாணவர்கள் அடுத்த கட்டப் பரிசீலனைக்குத் தேர்வாகியுள்ளனர். இதுபோல வாராவாரம் நேர்காணல் நடக்கிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பம் செய்திருக்கும் பலரும் இப்படி நேர்காணல் செய்யப்படுவார்கள்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற நேர்காணல்களிலிருந்து சற்றே வித்தியாசமாக இந்த ஆண்டு மாணவர்களுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டுதல்களும் கொடுக்கப்படுகிறது.



## சிறப்பு வகுப்பு

விதை திட்டத்தில் தேர்வாகி கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவது வழக்கம். அதன்படி ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தின் Toastmaster club மூலமாக, Introduction to public speaking, Impromto speaking, Organizing your speech & Body language மற்றும் Group discussion ஆகிய பயிற்சிகள் தரப்பட்டன. மூன்றாம் ஆண்டு பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. சென்னை அடையாறில் உள்ள எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், சோழிங்கநல்லூரில் உள்ள சத்யபாமா பல்கலைக்கழகத்திலும் மொத்தமாக எட்டு வகுப்புகள் நடைபெற்றன. பயிற்சியின் இறுதியில், கல்வி ஆலோசகர் திருமிகு. உலகம்மாள் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# ஆச்சர்ய உலகம்

பையன்களைவிட பெண்களுக்கு நாக்கில் சுவை மொட்டுகள் அதிகம் உள்ளன.



வெப்பக்காற்று பலூன்களில் மனிதர்கள் பறந்து செல்வதைப் பார்த்திருப்பீர்கள். ஓர் ஆடு, ஒரு வாத்து, ஒரு வான்கோழி ஆகியவைதான், மனிதர்கள் கண்டுபிடித்த முதல் பலூனில் பறந்தவை.



ஒரு வௌவால் ஒரே இரவில் மூன்று ஆயிரம் பூச்சிகளைக்கூட தின்னும்.



தர்ப்பூசணி உருண்டையாக இருக்கும்; நீள் உருண்டையாக இருக்கும். ஜப்பானில் பிரமிடு வடிவத்தில்கூட தர்ப்பூசணி கிடைக்கும். விதவித வடிவங்களில் அங்கு வளர்க்கிறார்கள்.



செவ்வாய்க் கிரகத்தில் இருக்கும் மிகப்பெரிய எரிமலையின் உயரம், 27 கிலோமீட்டர். இது எவரெஸ்ட் சிகரத்தைவிட மூன்று மடங்கு உயரத்துக்கும் மேல்.



இந்த பூமியில் நீண்டகாலமாக நின்று கொண்டிருக்கும் முதிர்ந்த மரத்தின் வயது, 5 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல்! எகிப்திய பிரமிடுகளுக்கும் இதே வயதுதான்.



நமது மூளையிலிருந்து நரம்புகளின் வழியே தகவல்கள் மணிக்கு 322 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கின்றன.



நமது நகங்கள் விரலின் அடிப்பக்கத்திலிருந்து நுனிவரை வளர்வதற்கு ஆறு மாதங்களே எடுத்துக்கொள்ளும்.



நமது தும்மல் மணிக்கு 161 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கிறது.



நம் உடலில் இருக்கும் 10 ஆயிரம் செல்களை ஒரு குண்டூசியின் தலையில் வைக்கமுடியும்.



தண்ணீருக்கு அடியில் கரப்பான் பூச்சிகளால் 15 நிமிடங்கள் வரை உயிரோடு இருக்க முடியும்.



பபுள் கம் 1906ம் ஆண்டு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. அப்போது அதன் பெயர், ப்ளிப்பர் ப்ளப்பர்.




நீலத் திமிங்கலத்தின் இதயம் மட்டுமே 900 கிலோ எடை இருக்கும்.



விண்வெளியில் சாப்பிடப்பட்ட முதல் உணவு, ஆப்பிள் சாஸ். ஓர் அமெரிக்க விண்வெளி வீரர் சாப்பிட்டார்.



நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் மேலிருந்து கீழே வருவதுதான் வழக்கம். அமெரிக்காவின் ஹவாய் தீவில் இருக்கும் ஒரு நீர்வீழ்ச்சியில் சில சமயங்களில் தண்ணீர் கீழிருந்து மேலே போகும்.



வெட்டுக்கிளிகள் அபாரமாகத் தாவும் வல்லமை பெற்றவை. மனிதர்களின் உயரத்தில் வெட்டுக்கிளிகள் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டால், ஒரு கூடைப்பந்து மைதானத்தை அவை அநாயாசமாகத் தாண்டிவிடும்.



மரங்களில் வாழும் சில தவளைகள், காற்றில் 50 அடி தூரம்வரை தாவும் வல்லமை பெற்றவை.



வானத்தில் மேகங்கள் மோதும்போது மட்டுமில்லை, எரிமலைச் சீற்றத்தின்போதும் மின்னல்கள் தோன்றும்.



ஒரே ஒரு சூரியனுக்குள் 10 லட்சம் பூமிகளைப் போட்டு நிரப்ப முடியும்.



106 டிகிரி ஃபாரன்ஹீட் என்பது நமக்கு மிக அபாயகரமான ஜுரம். ஆனால், அந்த வெப்பநிலையை எட்டும்வரை ஒட்டகங்களுக்கு வியர்க்காது.



ஆப்ரிக்க யானைகளின் காதை விரித்துப் பிடித்துப் பார்த்தால், அது ஆப்ரிக்க கண்டத்தின் வடிவத்தைப் போலவே இருக்கும்.



சைபீரியாவின் குளிர்காலத்தில் நீங்கள் விடும் மூச்சுக்காற்றுகூட வெளியில் வந்ததுமே உறைந்து ஐஸ் ஆகிவிடும்.



மனிதர்களுக்கு இருப்பது போலவே கைரேகைகள் இருக்கும் விலங்கு, கோலா கரடி.




பல விலங்குகளும் தண்ணீரில் மூழ்கிவிடும். ஆனால், முள்ளம்பன்றி மிதக்கும்.





# வித்தியாசம்தான் அழகு

■ பேராசிரியர் ச.மாடசாமி




ஓரிரு மாதங்களுக்கு முன், இயக்குநரும் நடிகருமான திரு. சமுத்திரக்கனியுடன் கல்வி குறித்து தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தபோது சொன்னேன்... ''உங்கள் பெயர் எங்கள் பழைய மாணவர்களின் பெயரை ஞாபகப்படுத்துகிறது.'' அவரும் ஒப்புக்கொண்டார். ''இது நம் பக்கத்துப் பெயர்'' என்றார். அவர் படித்ததும், நான் வேலை பார்த்ததும் விருதுநகர் மாவட்டத்தில்!

நான் பணியில் சேர்ந்த புதிதில், ஒவ்வொரு வகுப்பிலும் கருப்பசாமி, சமுத்திரக்கனி, அய்யனார் போன்ற பெயர்களைத் தவறாமல் சந்திப்பேன். பெயர்களுக்குள் ஊர், குடும்பம், குலதெய்வம் என ஓர் உலகம் கிடக்கும். எங்கள் கல்லூரி சில ஆண்டுகளில் இருபாலர் பயிலும் கல்லூரி ஆனபோது, பேச்சி, பெத்தம்மாள், பொன்னுத்தாய் என குடும்பங்களின் ஆதிப் பெயர்கள் சில வகுப்பறைகளில் தலைகாட்டின.

வருடங்கள் செல்லச் செல்ல வகுப்பறை வசதிகள், கற்பிக்கும் முறைகள் ஆகியவற்றில் பெரிய மாற்றங்கள் வந்துவிடவில்லை. ஆனால், மாணவ மாணவியர் பெயர்களில் மாற்றம் இருந்தது. பெத்தம்மாள் என்பது பிரியா என்றானது. பெருமாள் விஷ்ணுவாக மாறினான். கருப்பசாமி, கந்தசாமிகளுக்குப் பதிலாக சுரேஷ்,

மகேஷ்கள் நிரம்பினார்கள். மதுரை வீரன், வெள்ளையம்மாள் எனத் தப்பித் தவறிப் பெயர்கள் வந்துவிட்டால் வகுப்பறை சிரித்துக் குலுங்கியது.

பெயர்களின் உலகில் சில நல்ல மாற்றங்களும் நடந்தன. அழகிய தமிழ்ப் பெயர்கள் சில முன்னுக்கு வந்தன. இருப்பினும், பெரும்பாலான பெயர்களில், சமஸ்கிருதமயமாதல் என்ற ஒற்றைத் தன்மை வந்து படிந்தது. மதம், அரசு, பள்ளி என எல்லா அதிகாரங்களும் வித்தியாசங்களை அழித்து ஒற்றைத்தன்மையை வடிவமைக்கவே விரும்புகின்றன.

அறிவொளி இயக்கத்தின் மூலம் 1990களில் நரிக்குறவர் வீட்டுப் பிள்ளைகளைப் பெரும்பாடுபட்டு பள்ளிகளில் சேர்த்தோம். ஒட்டாமல் அவர்களை வகுப்பறைகள் ஒதுக்கி வைத்ததால், மீண்டும் அவர்களில் பலர் வீதிக்கு வந்த ஞாபகங்கள் அலைமோதுகின்றன. இலங்கை அகதிகளாக வந்த தமிழ்ப் பிள்ளைகள் பள்ளியில் சேர்ந்தபோது, அவர்கள் பேசும் தமிழ்மீது எழுந்த பரிகாசத்தால் அவர்கள் படிப்பைக் கைவிட்டு அழுத குரலும் இன்னும் மனதுக்குள் கேட்டபடி இருக்கிறது.



வித்தியாசங்களை ஏற்கும் பக்குவம் வகுப்பறையிலேயே உருவாகவேண்டும் என்பதை, கொரிய எழுத்தாளர் Yangsook Choi எழுதிய The Name Jar என்ற குழந்தைக் கதை உணர்த்துகிறது.

கதை இதுதான். அவள் கொரிய நாட்டுச் சிறுமி. அந்தச் சிறுமியின் பெயர் 'உன்ஹை' (UnHei). கூப்பிடும்போது 'யூன் ஹை' என்று அழைப்பார்கள். அவள் குடும்பம் சமீபத்தில் கொரியாவிலிருந்து அமெரிக்கா வந்திருக்கிறது. கொரியாவை விட்டுப் புறப்படும்போது, கொரிய மொழி எழுத்தில் 'உன்ஹை' என ரப்பர் ஸ்டாம்ப் ஒன்று செய்து கொடுத்துவிட்டார் பாட்டி. கூடவே, தொட்டு அடிக்க ஒரு இங்க் பேடும்! ரப்பர் ஸ்டாம்ப், இங்க் பேட் இரண்டையும் பத்திரமாக வைத்திருக்கிறாள் உன்ஹை.

அமெரிக்காவில் அவள் முதல் நாள் பள்ளிக்குச் செல்கிறாள். சிறிது பதற்றத்துடன் இருக்கிறாள். பள்ளிப் பேருந்தில் ஏறுகிறாள். பேருந்தில் உள்ள குழந்தைகளுக்கு உன்ஹையைப் பார்த்ததும் வியப்பு. 'யாரிவள்? புதியவள்! ''பெயரென்ன?'' என்று கேட்கிறார்கள். சொல்கிறாள். ''உன்ஹை!' அவர்களுக்குப் புரியவில்லை. 'ஊ... ஊ... ஊ...' என்று கேலி செய்கிறார்கள். ''யூன் ஹை என்று உச்சரிக்க வேண்டும் என் பெயரை'' என்கிறாள் உன்ஹை. 'யூ ஹை... ஹை யூ' என்று பெயரைத் திரித்துக் கூப்பிடுகிறார்கள். உன்ஹைக்கு முகம் வாடுகிறது.

தன் வகுப்புக்குப் போகிறாள். பஸ் போல மோசமில்லை வகுப்பறை. அங்கும் பிள்ளைகள் பெயர் கேட்கிறார்கள். பெயரைச் சொல்லவில்லை உன்ஹை. ''இன்னும் பெயரை முடிவு செய்யவில்லை'' என்கிறாள். இதைக் கேட்டு, பிள்ளைகளுக்கு ஆச்சர்யம். ''சரி, இவளுக்கு நாம் உதவலாம்'' என்று முடிவு செய்கிறார்கள்.

பள்ளி முடிந்து மாலை வீடு திரும்புகிறாள். வந்ததும் அம்மாவிடம் சண்டை: ''எனக்கு ஏன் இந்தப் பேர் வச்சீங்க? கூப்பிடறதுக்கே கஷ்டமான பேரு!'' அம்மா சொல்கிறார்: ''ஏன்? இந்தப் பேருக்கென்ன! நானும் பாட்டியும் பெயர் விற்பன்னரின் ஆலோசனை கேட்டுத்தான் உனக்கு இந்தப் பேரை வச்சோம். 'உன்ஹை' என்றால் கருணை என்று அர்த்தம். தெரிஞ்சுக்கோ!'' சிறுமி உன்ஹைக்கு மனது சமாதானம் ஆகவில்லை. கண்ணாடிமுன் நின்று அமெண்டா, லாரா என்று சில அமெரிக்கப் பெயர்களைச் சொல்லிப் பார்க்கிறாள். ம்ஹூம், ஒட்டவில்லை.

அன்று மாலை கிம் ஸ்டோர் என்ற கொரியன் கடைக்கு காய்கறி, பலசரக்கு வாங்க அம்மாவுடன் போகிறாள் உன்ஹை. அமெரிக்காவுக்கு வந்துவிட்டாலும் வீட்டில் சாப்பாடு எல்லாம் கொரியன் சாப்பாடுதான். காய்கறிகளை வைத்து உறைப்பாகத் தயார் செய்யும் 'கிம்சி' இல்லாவிட்டால் யாருக்கும் சாப்பாடு இறங்காது.

கிம் ஸ்டோரில் அதன் விற்பனையாளர் கிம்மை சந்திக்கிறாள் உன்ஹை. அவர் சிறுமியின் பெயரைக் கேட்கிறார். ‘ஆஹா, அருமை’’ என்று பாராட்டுகிறார்.

மறுநாள் வகுப்பறையில் ஒரு புதிய சுவாரஸ்யம். டேபிள்மீது ஒரு கண்ணாடி ஜார் இருக்கிறது. அதனுள் சில துண்டுச்சீட்டுகள். ஒவ்வொரு சீட்டிலும் ஒரு பெயர். டெய்சி, தமீலா... இப்படி! உன்ஹைக்கு உதவ வகுப்பறையின் ஏற்பாடு. உன்ஹை எடுத்து வாசிக்கிறாள். இந்த அன்பு பிடிக்கிறது. ஆனால், பெயர்களில் மனம் லயிக்கவில்லை.

உணவு இடைவேளையில் ஜோ வருகிறான். வகுப்பில் சக மாணவன். கொஞ்ச நேரத்திலேயே இருவரும் நண்பர்களாகிறார்கள். பாட்டி கொடுத்த ரப்பர் ஸ்டாம்ப்பை மையில் நனைத்து, சிறு தாளில் அடித்து ஜோவிடம் காட்டுகிறாள் உன்ஹை. ‘‘இதுதான் என் பெயர்’’ என்கிறாள். கொரிய மொழியில் இருந்தது பெயர். ஜோவுக்கு வாசிக்கத் தெரியவில்லை. இருந்தாலும் புரியாத இந்தப் புதுமை அவனுக்குப் பிடித்தது. ‘‘இந்தத் தாளை நான் வைத்துக்கொள்ளட்டுமா?’’ என்று ஆர்வத்தோடு கேட்கிறான். ‘‘வைத்துக்கொள்’’ என்று கொடுக்கிறாள்.



பெயர் ஜாடியில் தினசரி பெயர்கள் குவிந்தன. உன்ஹைக்கு உதவுவது மற்ற பிள்ளைகளுக்கு ஒரு ஹோம்வொர்க் போல ஆயிற்று. ஜாடியில் இருந்த மிராண்டா, ஸ்டெல்லா போன்ற சில பெயர்கள் உன்ஹைக்குப் பிடிக்கத்தான் செய்தன. ஆனால், முடிவு செய்யவில்லை. அந்த வாரம் முழுவதும் வகுப்பறையில் பெயரில்லாமலே இருந்தாள் உன்ஹை.

சனிக்கிழமை அம்மாவுடன் கிம் ஸ்டோர் போகிறாள். அங்கு எதிர்பாராவிதமாக நண்பன் ஜோவைச் சந்திக்கிறாள். இங்கு ஏன் இவன் வந்தான்? கடைக்காரர் தன் தோழியை ‘உன்ஹை’ என்று அழைப்பதை ஜோ பார்க்கிறான். ‘‘ஓ, உன் பெயர் உன்ஹையா?’’ என்று கேட்கிறான். ‘‘ஆம்’’ என்கிறாள் உன்ஹை.

ஜோவிடம் கடைக்காரர், ‘‘நீ கேட்ட பொருள் நாளை ரெடியாகும்’’ என்கிறார். ஜோ எதற்கு இங்கு வந்தான்? கிம்மிடம் என்ன கேட்டான்? உன்ஹைக்கு ஒன்றும் விளங்கவில்லை.

திங்கள்கிழமை. வகுப்பறையில் பெயர் ஜாடியைக் காணவில்லை. எங்கே போயிருக்கும்? தெரியவில்லை. ஆசிரியரின் அனுமதியோடு உன்ஹை தன் பெயரை ஆங்கிலத்திலும் கொரிய மொழியிலும் போர்டில் எழுதிப் போடுகிறாள். எப்படி உச்சரிக்க வேண்டும் என்றும் வகுப்புத் தோழர்களுக்குச் சொல்லித் தருகிறாள். முதலில் தோழர்கள் தவறாகவே உச்சரிக்கிறார்கள். படிப்படியாகத் திருத்திக்கொள்கிறார்கள். உன்ஹை ‘தன் பெயருக்குக் கருணை என்பது அர்த்தம்’ என்கிறாள். ரோஸி என்ற சிறுமி ‘தன் பெயர் மலரைக் குறிக்கிறது’ என்கிறாள். ஒவ்வொருவரும் அவரவர் பெயருக்கான காரணங்களை அலச ஆரம்பிக்கின்றனர்.

அன்று மாலை. உன்ஹை வீட்டில் இருக்கிறாள். ‘‘உன் நண்பன் வந்திருக்கிறான்’’ என்று அம்மா அறிவிக்கிறார். பார்த்தால் ஜோ! அவன் கையில் காணாமல் போன பெயர் ஜாடி. ‘‘எங்கே கண்டுபிடித்தாய்?’’ என்கிறாள் உன்ஹை. ‘‘இது இனி தேவையில்லை என்று எடுத்துவிட்டேன்’’ என்கிறான் ஜோ. அவளுக்கொரு பெயர் இருப்பதுதான் அவனுக்குத் தெரிந்துவிட்டதே!

‘‘கொரியப் பெயர்கள் எனக்குப் பிடிக்கின்றன. நானும் எனக்கொரு கொரியப் பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். கிம் எனக்கு உதவினார்’’ என்கிறான் ஜோ. தன் கொரியப் பெயர் பொறித்த ரப்பர் ஸ்டாம்பை எடுத்து மையில் நனைத்து, பேப்பரில் குத்துகிறான். கொரிய மொழி எழுத்தில் ‘சிங்கு’ என்ற பெயர். சிங்கு என்றால் நண்பன் என்று பொருள். அழகான பெயர்! வித்தியாசம்தானே அழகு! உன்ஹையின் முகம் மலர்கிறது.

குழந்தைகள் விரைவில் வித்தியாசங்களை ஏற்கிறார்கள். பெரியவர்கள் இறுகிக் கிடக்கிறார்கள். ‘‘எங்களை ஒரு வார்த்தை கேக்காம நீயா இஷ்டப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிறே! பண்ணிக்க. ஆனா அவ என்ன மதம்? நம்ம என்ன மதம்? நம்ம மதத்துக்கு மாறிட்டு வரட்டும். ஏத்துக்கிறோம்’’ என்று உறுமும் குடும்பங்களையும், அந்த உறுமல் கேட்டு வாடும் முகங்களையும் நிறைய பார்த்தாயிற்று. வித்தியாசங்களை ஏற்காத குடும்பம் என்ன குடும்பம்?

வித்தியாசங்களைத் தாண்டாவிட்டால்... அது என்ன நட்பு? அது என்ன உறவு? அது என்ன மனிதப் பண்பு? ●

# மறந்துபோன மறுசுழற்சி!

குடிநீர் வழங்கும் ஏரிகள் அத்தனையும் வேகவேகமாகக் குறைந்துவரும் நிலையில், மீண்டும் ஒரு கடுமையான கோடைக்காலத்தைச் சந்தித்துள்ளது சென்னை மாநகரம். கோடை மழையை எதிர்பார்த்துக் காத்திருப்பதோடு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இருக்கும் கிணறுகளிலிருந்து தண்ணீரை உறிஞ்சி நிலைமையை சமாளிக்கிறார்கள் அதிகாரிகள். மாநகரமெங்கும் இரவு பகலாக ஓடிக்கொண்டிருக்கும் டேங்கர் லாரிகள், நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகின்றன.

இப்போது சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நான்கு ஏரிகளும் சுமார் 51 சதவிகிதத் தேவையை மட்டுமே பூர்த்தி செய்கின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்வாய் கண்டிகை என்ற இடத்தில் இன்னொரு ஏரியை சென்னையின் தேவைக்காக விரைவில் பயன்படுத்த உள்ளார்கள். இதுதவிர கிழக்குக் கடற்கரைச் சாலையில் கடல்நீரைக் குடிநீராக்கும் இன்னொரு நிலையம் புதிதாக அமைய உள்ளது.



இவை எல்லாம் வந்தாலும்கூட சென்னை தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள ஒரு நகரமாகவே இருக்கும்.

சென்னையின் ஒருநாள் தண்ணீர்த் தேவை எவ்வளவு என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். தண்ணீர் அளவுக்கு அதிகமாக இருந்தால், ஒவ்வொரு நாளும் சுமார் 81 கோடி லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யப்படும். பற்றாக்குறையின்போது இந்த சப்ளை தாறுமாறாகக் குறைந்துவிடும். வரும் 2030ம் ஆண்டில் சென்னையின் தினசரி தண்ணீர்த் தேவை 119 கோடி லிட்டராக உயரும். அப்போது தினமும் 38 கோடி லிட்டர் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும்.

இந்த இடைவெளியை எப்படிப் பூர்த்தி செய்வது? ''அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளே தண்ணீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துகின்றன. நாம் இந்த வளத்தைப் பயன்படுத்துவதே இல்லை. மக்கள் பயன்படுத்தும் தண்ணீரில் சுமார் 60 சதவிகித தண்ணீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்த முடியும். சமையலறை போன்ற இடங்களிலிருந்து செல்லும் கழிவுநீரை மறுசுழற்சி செய்து தோட்டங்களுக்கும், துணி துவைக்கவும், கழிப்பறைகளுக்கும் பயன்படுத்தலாம். இதைச் செய்ய நாம் தயாராக இல்லை'' என்கிறார், அண்ணா பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் இளங்கோ லட்சுமணன்.

அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய ஓர் ஆய்வின்படி, வரும் 2030ம் ஆண்டுவாக்கில் சென்னையில் தினமும் சுமார் 30 கோடி லிட்டர் தண்ணீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. காவிரியையும் கிருஷ்ணாவையும் எதிர்பார்த்துக் காத்திருப்பதைவிட, மறுசுழற்சிக்குத் திட்டங்கள் தீட்டினால், மாற்றம் நிச்சயம் வரும். •

# திசை மாறும் பிள்ளைகளை தேடல் உள்ளவர்களாக மாற்றுவோம்!

## ஓர் உதாரண ஆசிரியரின் அனுபவம்

தனியார் பள்ளிகளின் பெருக்கத்தால், அரசுப் பள்ளிகளில் சேர்கிற மாணவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் குறைந்துகொண்டே போகிறது. இதனால் ஒவ்வோர் ஆண்டும் பல பள்ளிகளை மூட நேர்வது பெரும் துயரம். பெரும்பாலான அரசுப் பள்ளிகள் இயங்கக் காரணம், ஏழை அடித்தட்டு வர்க்கம் இன்னும் அரசுப் பள்ளிகளை நம்பி இருப்பதே. இத்தகைய அரசுப் பள்ளிகள், மாணவர்களுக்கு கல்வியோடு சேர்த்து நல்லொழுக்கத்தையும் சொல்லித்தரும் இடத்தில் இருக்கின்றன.

அரசுப் பள்ளி ஆசிரியர்கள்மீது பலருக்கும் விமர்சனங்கள் இருந்தாலும், பெரும்பாலான நல்லாசிரியர்கள் அரசுப் பள்ளிகளில்தான் இருக்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை அமுதா அவர்கள், அப்படி ஓர் உதாரண நல்லாசிரியராகத் திகழ்கிறார். போதைக்கு அடிமையாகி, இளம் வயதிலேயே சீரழிவுப் பாதையை நோக்கிப் பயணிக்கும் சில மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக்கொண்டிருக்கிறார் அமுதா.

''இது நகர்ப்புறத்தில் இருக்கும் பள்ளிதான். ஆனால், படிக்கிறவர்கள் பெரும்பாலும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. பெற்றோர் தினமும் காலை முதல் இரவுவரை உழைத்தால்தான் குடும்பம் நடத்தமுடியும் என்ற நிலையில் இருக்கும் குடும்பங்கள். அதனால் குழந்தைகளின் படிப்பையோ, சூழலையோ கவனிக்க பெற்றோருக்கு நேரம் இருக்காது.



நான் இந்தப் பள்ளிக்கு வந்து ஒரு வருடம் ஆகிறது. ஏழாம் வகுப்பு ஆசிரியராக இருக்கிறேன். ஏழாம் வகுப்பிலேயே இந்தக் குழந்தைகளில் சிலர் போதைப் பழக்கங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். மலிவு விலையில் கிடைக்கும் ஒரு சில போதைப் பொருட்களைப் பயன்படுத்துகிறவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு நேரடியாக கவுன்சிலிங் கொடுத்து இந்த பழக்கங்களிலிருந்து மீட்பது இப்போதைக்கு முடியாத செயலாக உள்ளது. அவர்களும் ஒத்துழைக்க வேண்டும். கவுன்சிலிங் என்று பொதுவாக செய்யும்போது, மற்ற மாணவர்கள் முன்னிலையில் இவர்கள் தலைகுனிந்து நிற்க நேரிடலாம். இதை அலட்சியமாக விட்டால், இவர்களிடமிருந்து மற்ற மாணவர்களும் இந்தப் பழக்கங்களுக்கு ஆளாக நேரிடலாம்.

என் கண் முன்பாக இருந்த ஒரே வாய்ப்பு, மாணவர்களை நல்ல திசையை நோக்கித் திருப்புவது. வாரம் ஒரு பீரியட் மாணவர்களுடன் பேசுவதற்காக கட்டாயம் ஒதுக்கிவிடுவேன். அந்த பீரியடில் முழுக்க முழுக்க மாணவர்களின் எதிர்காலம் குறித்தும், நல்வாழ்க்கை குறித்தும் பேசுவேன். 'உங்களுக்குப் பிடிச்சவங்க யாரு? அவங்களுக்கு உங்களைப் பிடிக்கணும்னா நீங்க என்ன செய்யணும்? அப்பா அம்மாவை உங்களுக்குப் பிடிக்கும். அவங்களுக்கு பையன் தவறான பாதையில் போறது தெரிஞ்சா வருத்தம் ஏற்படும் இல்லையா?' என்பது போல, நேரடியாக அட்வைஸ் செய்யாமல் குறிப்பாக சொல்வேன். குழந்தைகள் சிந்திப்பார்கள். குழந்தைகள் முன்னால் பல வழிகள் இருக்கின்றன. எந்த வழியில் போனால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என நாம் காட்டினால்

போதும். அவர்கள் நல்வழிக்குத் திரும்பிவிடுவார்கள்.

இப்படி அவர்களைத் தேடல் உள்ளவர்களாக நல்வழியை நோக்கி திசை திரும்பும்போது, தீய குணங்கள் தானாக அழிந்துவிடுகின்றன. பள்ளியின் படிக்கட்டு சுவர் முழுக்க யாரோ கிறுக்கிவைத்த ஆபாச கிறுக்கல்களும் அழுக்குகளுமே இருக்கும். பெயின்ட் வாங்கிக் கொடுத்து, அந்த இடங்களில் ஏழாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்பு சிறுவர்களை சித்திரங்கள் வரைய வைத்தேன். மற்ற பலர் 'ஏன் உனக்கு இந்த வேண்டாத வேலை?' என்றார்கள். ஆனால், அற்புதமான மாற்றம் நிகழ்ந்தது. தேர்ந்த ஓவியர்கள்கூட தோற்றுவிடுவார்கள். அந்த அளவுக்கு சுவர் முழுக்க ஓவியங்களை வரைந்து அசத்திவிட்டார்கள். அதுபோல எங்களுடைய வகுப்பறையிலும் ஓவியங்களை வரைய வைத்திருக்கிறேன்.



அமுதா

இப்படி மற்ற விஷயங்கள் பக்கம் கவனம் திரும்பினால் அவர்களின் படிப்பு கெட்டுப்போகுமோ என்ற கவலை சிலருக்கு எழுந்தது. நான் இதை மனக்குறையுடன் மாணவர்களிடம் சொன்னபோது, 'நாங்கள் படிப்பிலும் அசத்துவோம்' எனக் கூறி, அப்படியே சிறந்த மதிப்பெண்களைப் பெற்றும் காண்பித்தார்கள்'' என பூரிப்புடன் சொல்கிறார் ஆசிரியர் அமுதா.

மதுராந்தகம் அருகே உள்ள ஓர் அரசுப் பள்ளியில் தன்னுடைய பணியைத் தொடங்கிய அமுதா, அங்கிருந்தே மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தத் தொடங்கியிருக்கிறார். நாடகங்கள் நடத்துவது, கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது என மாணவர்களை படிப்பைக் கடந்த செயல்பாடுகள் மூலம் நல்வழிப்படுத்த முடியும் என அந்தப் பள்ளியில் முயற்சி செய்திருக்கிறார். அதுதான் தனக்கு இந்தப் பள்ளியில் கைகொடுப்பதாகத் தெரிவிக்கிறார் அமுதா.




''இருக்கிற இடத்தை சிறப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற பழக்கம் எனக்கு சிறுவயது முதலே உண்டு. அந்த வகையில்தான் நான் செல்லும் அரசுப் பள்ளிகளிலும் இதைச் செய்கிறேன். வளரும் பிள்ளைகளுக்கு நிறைய தேடல் இருக்கும். தனியார் பள்ளிகளில் படிக்கிற குழந்தைகளுக்கும், வசதி படைத்த குழந்தைகளுக்கும் பள்ளிக்கு வெளியே கற்றுக்கொள்ள நிறைய வாய்ப்புகள் உள்ளன. ஆனால், ஏழ்மை நிலையில் உள்ள பெரும்பாலான அரசுப் பள்ளி குழந்தைகளுக்கு இந்த வாய்ப்புகள் இல்லை. அதை உருவாக்கித் தரும் கடமை என்போன்ற ஆசிரியர்களுக்கு உள்ளது. குழந்தைகளின் கலைத்திறமையை ஊக்குவிக்கும் விதமாக நிறைய செயல்பாடுகளை அவர்களுக்குக் கொடுப்பேன். ஐந்து ரூபாய், அதிகபட்சம் பத்து ரூபாய் செலவில் கிடைக்கிற பொருட்களை வைத்து புராஜெக்ட் செய்து கொண்டு வரச்சொல்வேன். என்னுடைய வகுப்பில் சில மாணவர்கள் இணைந்து துடைப்பக் குச்சியைக் கொண்டு அழகான ஈஃபில் டவரை உருவாக்கியிருந்தார்கள். குச்சிகளின் மீது பெயின்ட் செய்ய மட்டும் பத்து ரூபாய் செலவு. அவ்வளவுதான். அந்த பட்ஜெட்டில் ஒரு படைப்பை தாங்களும் உருவாக்கி விட்டதை நினைத்து அந்த மாணவர்களுக்கு அத்தனை மகிழ்ச்சி!

இந்த மாணவர்களில் சிலருக்குப் பிரச்னையே, அவர்கள் இருக்கும் சூழல்தான். தவறான விஷயங்களையும், ஆபத்தான பழக்கங்களையும் கற்றுத் தரும் முன்னுதாரணங்களாக அவர்களைச் சுற்றிலும் நிறைய பேர் இருக்கிறார்கள். அதிலிருந்து அவர்களை விலகியிருக்கச் செய்வதுதான் எங்கள் முன்னால் இருக்கும் சவால். ஏழாவது வகுப்பு படிக்கும்போதே, தங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டால், பனிரெண்டாம் வகுப்பு செல்லும்போது பள்ளிக்கே உதாரண மாணவர்களாக மாறிவிடுவார்கள். அந்த நம்பிக்கையோடுதான் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன்'' என்று முடிக்கிறார் அமுதா.

– மு.வி.நந்தினி





Malabar banded peacock

# வண்ணத்துப்பூச்சிகளுக்குப் பிடித்த தாவரங்கள்!

**சுற்றுச்சூழல் செய்திகள்**

தேன் குடிக்கச் செல்லும் வண்ணத்துப்பூச்சிகளாக மாறுவதற்கு முன்பாக, கம்பளிப்புழுவாக இருக்கின்றன அவை. அந்த இளம்பருவத்தில் அவை வெறித்தனமாக இலைகளைத் தின்று தீர்க்கின்றன. இவை எந்த மரங்கள் மற்றும் செடிகளின் இலைகளை விரும்பித் தின்கின்றன என்ற ஆராய்ச்சி மிக முக்கியம். ஏனெனில், அந்தத் தாவரங்களைப் பாதுகாத்தால்தான் கம்பளிப்பூச்சிகள் ஆரோக்கியமாக வளரும். கம்பளிப்பூச்சிகள் வளர்ந்தால்தான் வண்ணத்துப்பூச்சிகள் உருவாகும். வண்ணத்துப்பூச்சிகள் நிறைய வந்தால்தான், மகரந்தச் சேர்க்கை முறையாக நடைபெற்று தாவரங்கள் பல்கிப் பெருக முடியும். இது ஓர் உயிர்ச்சங்கிலிச் சுழற்சியாக இயல்பில் நடைபெற வேண்டும்.

தமிழகம் மற்றும் கேரளாவில் இருக்கும் உலகின் முக்கியமான உயிர்ச்சூழல் மண்டலமான மேற்குத்தொடர்ச்சி மலையில் 336 வகை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளன. இவற்றில் 320 வண்ணத்துப்பூச்சிகளின் லார்வாக்களும் கம்பளிப்பூச்சிகளும் 834 வகை தாவரங்களின் இலைகளை விரும்பி உண்பதாகக் கண்டறிந்துள்ளார்கள். சாதாரண கறிவேப்பிலை செடியில் ஆரம்பித்து, மிக அரிதான ஆர்க்கிட் செடிகள் வரை எல்லாம் இதில் அடக்கம். பெங்களூருவில் இருக்கும் National Centre for Biological Sciences நிறுவனம் இந்தக்




## யானைகளைக் காப்பாற்ற போர்டு!

ஈரோடு மாவட்டம் பவானிசாகரிலிருந்து கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் செல்லும் மாநில நெடுஞ்சாலை, அடர்த்தியான காடுகளின் வழியே போகிறது. இந்த நெடுஞ் சாலையில் பல இடங்களில் யானைகளின் வழித்தடங்களும்



கணக்கெடுப்பைச் செய்துள்ளது. இதில் இன்னும் 16 வகை வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்வு இதுவரை புதிராகவே உள்ளதால், இன்னும் அவை விரும்பும் தாவரங்கள் பற்றித் தெரியவில்லையாம்.

''மேற்குத்தொடர்ச்சி மலையில் இருப்பதில் 48 வகை வண்ணத்துப்பூச்சிகள் உலகில் வேறெங்கும் இல்லை. இவற்றைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உள்ளது. இவை உயிர்வாழ இங்கு நிறைய தாவரங்கள் தேவை. குறிப்பாக Malabar banded peacock, Kodagu forest hopper மற்றும் Shiva sunbeam போன்ற வண்ணத்துப்பூச்சி இனங்களின் லார்வாக்கள், ஒரே ஒரு தாவரத்தை நம்பியே வாழ்கின்றன. அந்தத் தாவரம் அழிந்தால், இந்த வண்ணத்துப்பூச்சிகளும் காணாமல் போய்விடும். இந்த அபாயத்தை நாம் உணரவேண்டும்'' என்கிறார், இந்தக் கணக்கெடுப்பைச் செய்த குழுவின் தலைவரான நிதின்.


குறுக்கிடுகிறது. யானைகள் தவிரவும் புலி, சிறுத்தை, மான், மயில், காட்டுப்பன்றி என நிறைய விலங்குகளும் இந்த சாலையைத் தாண்டுகின்றன. ஆனால், இது தெரியாமல் தாறுமாறான வேகத்தில் வாகனங்கள் இந்த சாலையில் வருகின்றன. திடீரென யானைக்கூட்டம் குறுக்கிடும்போது, வாகனத்தை உடனே நிறுத்த முடிவதில்லை. இதனால் விலங்குகள் பரிதாபமாக இறக்கின்றன.

இந்த இறப்பைத் தடுக்க 15 இடங்களில் புதிதாக அறிவிப்புப் பலகைகளை வனத்துறை வைக்கிறது. 'யானைகள் நடமாடும் இடம்' என்ற அறிவிப்போடு, யானைகளின் கட்அவுட் உருவமும் இதில் இடம்பெற்றுள்ளது.

# வண்டலூருக்கு மொபைல் ஆப்!

சென்னை வண்டலூரில் இருக்கும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்காக தனி மொபைல் ஆப், தமிழக வனத்துறையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரி விடுமுறைக் காலத்தில் வண்டலூர் பூங்காவுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். இதைக் கருத்தில்கொண்டு இந்த நேரத்தில் ஆப் வெளியாகியுள்ளது. இதைப் பயன்படுத்தி ஆன்லைன் டிக்கெட் எடுக்கலாம்; வண்டலூர் உயிரியல் பூங்காவை நேரில் சென்று பார்ப்பது போன்ற உணர்வோடு ஒரு கற்பனை டூரும் அடிக்கலாம்.

'Vandalur Zoo' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மொபைல் ஆப், டிக்கெட் பதிவுசெய்வது, பூங்காவின் வரைபடம், விலங்குகள், 4டி காட்சியில் பூங்காவை ரசிப்பது, பூங்காவின் நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவற்றை உள்ளங்கையில் தருகிறது. பூங்காவில் எந்தெந்த பக்கத்தில் என்னென்ன விலங்குகள் இருக்கின்றன, அவற்றைப் பார்க்க எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என இதில் அறியலாம்.



விலங்குகளுக்காக இருக்கும் தனிப் பிரிவில் பறவைகள், ஊர்வன, பாலூட்டிகள் என வகைபிரித்து எல்லாவற்றையும் பற்றி அறிமுகம் தருகிறார்கள். ஆசியக் காட்டுக் கழுதை, கேழையாடு, இமாலய பழுப்பு நிறக் கரடி, வராக மான், மலை அணில், பபூன் குரங்கு, வல்லபீ கங்காரு என அபூர்வ விலங்குகள்... கருந்தலைச் சில்லை, தங்க பஞ்சவர்ணக் கிளி, வெள்ளிநிறக் கோழி, சிப்பாய் நாரை என பறவைகள்... முதலைகள் மற்றும் பாம்புகள் என ஒவ்வொன்றையும் பற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்புகள் தருகிறார்கள்.

4டி பிரிவில் விலங்குகள் நான்கு பரிமாண உருவமாக நம் மொபைல் போன் திரையில் நம் உள்ளங்கைக்கு அருகே வருகின்றன. குறிப்பிட்ட விலங்குகள் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் விவரிக்கவும் செய்கிறார்கள். புலி, சிம்பன்ஸி, ஒட்டகச்சிவிங்கி என 14 விலங்குகள் இப்போது உள்ளன. விரைவில் இன்னும் பல விலங்குகள் இதில் இணையும். அதேபோல, விலங்குகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும்விதமாக சில விளையாட்டுகளையும் இதில் இணைக்க இருக்கிறார்களாம்.

# காவு வாங்கும் காற்று!

உலகில் காற்றுமாசு அதிகமுள்ள நகரங்கள் பட்டியலை சமீபத்தில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் டாப் 20 நகரங்கள் பட்டியலில் முதல் 14 இடங்களைப் பெற்றிருப்பவை இந்திய நகரங்களே! கான்பூர், ஃபரீதாபாத், வாரணாசி ஆகியவை முதல் மூன்று இடங்களில் உள்ளன. ''இந்தக் கணக்கீடு எதை அடிப்படையாகக் கொண்டது என்பது தெரியவில்லை. கடந்த 2010 முதல் 2016ம் ஆண்டு வரையான காற்றுமாசு அளவை வைத்து இதைக் கணக்கிட்டுள்ளனர். இப்போது நாங்கள் நிலைமையை சீர்செய்துவிட்டோம்'' என மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் சொல்கிறது.

இந்த ஆபத்துப் பட்டியலில் தென்னிந்திய நகரங்கள் எதுவும் இல்லை என்பது நமக்கு ஆறுதல்.





European Turtle-dove



Atlantic Puffin

# எட்டில் ஒரு பறவைக்கு ஆபத்து!

புகழ்பெற்ற BirdLife International அமைப்பு, ஒவ்வொரு ஆண்டும் உலகப் பறவைகளின் நிலை பற்றி அறிக்கை வெளியிடும். 2018–ம் ஆண்டுக்கான அறிக்கை சமீபத்தில் வெளியாகியுள்ளது. உலகெங்கும் இருக்கும் பறவை இனங்களில் எட்டில் ஒன்று அழியும் ஆபத்தில் இருப்பதாகக் கவலை தெரிவிக்கிறது அந்த அறிக்கை. குறிப்பாக Snowy Owl, Atlantic Puffin, European Turtle-dove போன்றவை மிக மிக ஆபத்தில் இருப்பதாகக் கவலையோடு சொல்கிறது அந்த அறிக்கை.

அது தரும் புள்ளிவிவரங்களின்படி...

- உலகெங்கும் வாழும் சுமார் 11 ஆயிரம் பறவை இனங்களில், சுமார் 40 சதவிகிதப் பறவைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது.
- உலகெங்கும் 8,417 பறவை இனங்களின் எதிர்காலம் குறித்து நாம் பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை. காரணம், அவை எல்லா அழிவுகளையும் தாண்டி தாக்குப்பிடித்து வாழ்கின்றன.
- 1,017 பறவை இனங்கள் ஆபத்தின் விளிம்பில் உள்ளன.
- 786 பறவை இனங்கள், அவற்றின் வாழ்விடங்களை இழப்பதால் அபாய கட்டத்தை நெருங்கியுள்ளன.
- 461 பறவை இனங்கள் ஆபத்தான நிலையில் உள்ளன. இவற்றைக் காப்பாற்ற நாம் முயற்சி எடுக்கவில்லை என்றால், இவை காணாமல் போய்விடும்.
- 222 பறவை இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இந்தப் பறவை இனங்களில் கடைசி வெகுசில மட்டுமே இப்போது உயிரோடு வாழ்கின்றன. இவை காப்பாற்றப்படவில்லை என்றால், சில மாதங்கள் அல்லது சில ஆண்டுகளில் இவை மொத்தமாக அழிந்துபோகும்.



2D ENTERTAINMENT
சூர்யா வழங்கும்
கார்த்தி நடிக்கும்
TEASER SOON
கடைக்குட்டி
சிங்கம்
விவசாயம் பழகு
பாண்டிராஜ்
R.வேல்ராஜ் D.இமான் வீரசமர் ரூபன்
இணை தயாரிப்பு ராஜ்சேகர் கற்பூரசுந்தரபாண்டியன்
தயாரிப்பு சூர்யா
SONY MUSIC

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050. Day of Publishing: 01-05-2018







மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ ©

காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia